23.05.2013

# உதய சூரியன்

Source for reading hunters

கலம் - 01. சூரியன் - 38 பக்கம்: 32 விலை: 20/=


## வறுமைக்குப் பலியான 3 உயிர்கள்



## கோடிகளுக்கு மண்டியிட்டு கௌரவம் இழக்கும் கிரிக்கெட்




# வறுமைக்குப் பலியான 3 உயிர்கள்



**தா**ய் என்பவள் தான் பெற்ற குழந்தைகளை கண்ணுக்கு கண்ணாகக் கருதுபவள். குழந்தைகளைக் காக்க தன்னுயிரையும் கொடுக்கத் தயங்காதவள்!

தன் உயிரினும் மேலான குழந்தைகளை பிரிய நேர்ந்தால்...நோயால், விபத்தால் குழந்தைகளின் உயிரை மரணம் காவு கொண்டால்.... தாங்கிக் கொள்ள முடியாதவள்!

அப்படிப்பட்ட தாயொருவரே தன் மூன்று குழந்தைகளின் பரிதாப மரணங்களுக்கு காரணமாகியிருக்கிறாள்! மூன்று குழந்தைகளையும் அவளே கொலை செய்திருக்கிறாள்! அவளை இந்த கோர முடிவுக்கு கொண்டு சென்றவர்கள் யார்? எப்படி அவளால் இந்த பாதகத்தை செய்ய முடிந்தது?

கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை!

வவுனியா பிரதேசம் வழமைபோல விடிந்தது. அவரவர் வாழ்க்கை வழமைபோலவே நடந்தேறிக் கொண்டிருந்தது.

வவுனியா தாண்டிக்குளத்தில் வசிக்கும் சந்திரமலரின் குடும்பத்தில் மாத்திரம் வழமைக்கு மாறான சம்பவம் நடந்தேறியது. தனது மூன்று பெண் குழந்தைகளை வீட்டுக் கிணற்றில் தள்ளி விட்டு சந்திரமலர் தானும் தற்கொலை செய்ய முயன்று கிணற்றுள் பாய்ந்துள்ளார்.

அதிர்ஷ்டவசமாகவோ துரதிஷ்டவசமாகவோ அயலவர்களால் சந்திரமலர் காப்பாற்றப்பட்டுவிட்டார். எனினும் மூன்று குழந்தைகளின் உயிர்கள் காலதேவனால் கைப்பற்றப்பட்டுவிட்டன.

"இவளெல்லாம் ஒரு தாயா? தன் பிள்ளைகளைக் கொல்ல எப்படி மனம் வந்தது?

அவள் ஒரு மனநோயாளி, மனுசன் விட்டுட்டு வேறொருத்தியுடன் போட்டானாம். அதான் இப்படி செய்திருப்பாள்."

விடயத்தைக் கேள்விப்பட்ட பலரும் இப்படி பலவிதமான விமர்சனங்களை சொல்கின்றனர்.

★★★

வவுனியா சமணங்குளத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த சந்திரமலர் விஜயகுமார் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டாள். அன்பின் பரிசாக அவள் ஐந்து அழகிய குழந்தைகளையும் பெற்றெடுத்தாள்.

முதல் இரு பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளாவர். மற்றைய மூவரும் பெண் பிள்ளைகள். இவ்வாறு ஐந்து பிள்ளைகளுடன் இவர்கள் வவுனியா தாண்டிக்குளத்தில் வசித்து வந்தனர்.

அப்போதுதான் இவர்களது வாழ்வில் விதி விளையாடத் தொடங்கியது.

கணவன் விஜயகுமார் அவளை தனிமையில் விட்டு வேறு பெண்ணை திருமணம் செய்துகொண்டான். காதலித்து திருமணம் செய்து அன்பாக இருந்த கணவன் ஐந்து பிள்ளைகளுடன் கைவிட்டுச் சென்றுவிட்டான் என்றதும் நொந்து நூலாகினாள் இந்த சந்திர மலர். குழந்தைகளை எவ்வாறு காப்பாற்றப் போகின்றேன் என எண்ணி தினம் தினம் வேதனைப்பட்டாள். அவளுக்கு தொடர்ச்சியாக மன ரீதியாக இவ்வாறு ஏற்பட்டு வந்த அழுத்தங்கள் இன்று சந்திரமலரை ஒரு மனநோயாளி என கூறவைத்துள்ளது.

வறுமையின் கொடுமை தாங்காது தன் பிள்ளைகளுக்கு மரணத்தை தீர்வாக வழங்கும் முடிவை சந்திரமலர் எடுத்திருக்கிறாள். ஆண்பிள்ளைகளில் ஒருவரை உறவினர் வீட்டுக்கும் மற்றொருவரை பாடசாலைக்கும் அனுப்பிவிட்டு தன் மூன்று பெண் குழந்தைகளோடு மரணத்தை தழுவிக் கொள்ளும் முடிவுக்கு வந்திருக்கிறாள்,

இது தொடர்பில் அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருடத்துக்கு முதல் தான் இந்த வீட்டிற்கு இவர்கள் வாடகைக்கு வந்தாங்கள். இவங்களுக்கு ரெண்டு பொடியளும் மூன்று பொட்டையளும் இருக்கிறாங்க. கஸ்ரத்தில கிராம சேவகரிட்ட உதவி கேட்டாங்க. இவர்கள்



தொடர்பில் கிராமசேவகரால் பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிக்கு சிபாரிசு செய்யப்பட்டு கடிதம் கொடுக்கப்பட்டது. ஆனால் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெறும் என நாம் எண்ணவில்லை என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தாண்டிக்குளம் பாடசாலை வீதியில் உள்ள இவர்களின் வீட்டிலிருந்து அழுகுரல் கேட்டதாகவும் தாம் ஓடிச் சென்று கிணற்றை பார்த்தபோது சந்திரமலர் தன் மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் வீழ்ந்து கிடந்ததை அவதானித்ததாகவும் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாய் சந்திரமலர் காப்பாற்றப்பட்ட போதும் லதுர்சிகா (வயது 6) சன்சிகா (2 - 1/2 வயது) மற்றும் நிதர்சிகா (1 - 1/2 வயது) ஆகிய மூன்று பிள்ளைகளும் உயிரிழந்திருந்தனர்.

சம்பவம் அறிந்து வருகைதந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் பிரதேச செயலகச் சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜே.ஜெயக்கொடியிடம் கேட்டபோது,

சம்பவத்திற்கு முதல் நாள் கிராம சேவகரால் தாயொருவரும் 3 பிள்ளைகளும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் சிறுவர்களை சிறுவர் காப்பகம் ஒன்றில் அனுமதிக்குமாறும் தாயார் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தமையினால் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இந்நிலையில், இக்குழந்தைகளின் தந்தையை அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடினோம். தனது மூன்று பிள்ளைகளையும் காப்பகத்தில் விடுமாறு அவரால் கோரப்பட்டதுடன் மனைவி மனநலம் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

எனினும் பிள்ளைகளை அவர்களின் பாட்டியினுடைய வீட்டில் விடுவதற்கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டது. எனினும் குழந்தைகளை ஏற்க அவர்கள் இணங்கவில்லை. இதைத் தொடர்ந்து மீண்டும் நாம் சிறுவர் காப்பகத்தில் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம். இருந்தபோதிலும் இக்குழந்தைகளுக்கு பெற்றோர் இருப்பதனால் சிறுவர் காப்பகத்தில் அக்குழந்தைகளை அனுமதிக்க முடியவில்லை. எனவே நாம் தந்தையுடன் கலந்துரையாடி இவர்களது வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பி வைத்திருந்தோம் என தெரிவித்தார்.

அத்துடன் சில சட்ட திட்டங்களும் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களினாலுமே அப் பிள்ளைகளை சிறுவர் காப்பகத்தில் விட முடியாத நிலை ஏற்பட்டது. இதனையிட்டு நான் வேதனைப்படுகின்றேன். இவ்வாறு அந்தத் தாய் தனது பிள்ளைகளை காப்பாற்ற எம்மிடம் கேட்ட போது எமது சட்ட திட்டம் இடம் தரவில்லை. இதனால் இன்று ஒன்றும் அறியாத மூன்று பாலகர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என அவர் தெரிவித்தார்.

மூன்று குழந்தைகள் அநியாயமாக மரணத்தைத் தழுவிவிட்டன.

கணவனை பிரிந்த நிலையிலும் ஐந்து பிள்ளைகளை பெற்று இதுவரை காலமும் சீராட்டி தாலாட்டி வளர்த்த தாய் மன நோயாளி என சொல்லப்படுகிறாள். கொலைகாரி என குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாள்.

அவளின் கணவன் பொறுப்பான தகப்பனாக குழந்தைகளை வளர்க்க கைகொடுத்திருந்தால்...!

அந்தத் தாய் உதவி கேட்ட போது பொறுப்பு வாய்ந்த அரச திணைக்களங்கள் சமுதாய நோக்கோடு செயற்பட்டிருந்தால் ...!

அந்த தாய் தன் குழந்தைகளுக்காக கிராம அலுவலர், சிறுவர் மேம்பாட்டு அதிகாரி, பிரதேச செயலாளர், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் என எத்தனையோ படிகளை ஏறி இறங்கியுள்ளார். அத்தனை வாசல்களும் அவளது வாழ்க்கைப் பயணத்தை அடைத்தனவே தவிர உதவியதாக இல்லை. இவர்கள் கைகொடுத்திருந்தால்...!

குழந்தைகளை வளர்க்க போராடிய அவளுக்கு சமூகத்தில் உள்ள ஒரு மக்கள் பிரதிநிதியோ? சமூகத் தொண்டர்களோ உதவி செய்திருந்தால்...!

இந்த மரணங்கள் நிச்சயம் தவிர்க்கப்பட்டிருக்கும்.

பத்து மாதம் வயிற்றிலே சுமந்து தன் இரத்தத்தை பாலாக்கி பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களை சீராட்டி வளர்த்த தாய், அக் குழந்தைகளை தன் கையாலேயே கொலை செய்வதற்குத் தூண்டியவர்கள் யார்?

-கே.வாசு-

# பதுளை பெருந்தோட்டங்களில் மீண்டும் தலையெடுக்கும் கசிப்பு



மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சாபக்கேடான ஒரு விடயமாக மதுபாவனை பல தசாப்தங்களாக இருந்து வருகிறது. மதுவுக்கு அடிமைப்பட்டு மதியிழந்து தமது குடும்ப வாழ்க்கையை சீரழித்துக் கொண்டு துன்பப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். எனினும் இவ்வாறான துன்பங்கள் அவர்களின் மது பாவனைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகத் தெரியவில்லை.

தோட்டங்களை மையப்படுத்தி சந்திக்குச் சந்தி திறக்கப்பட்டிருக்கும் அரச அனுமதிபெற்ற மதுபான சாலைகளும் தோட்டங்களில் தொழிலாளர் குடியிருப்புகளில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் சட்ட விரோத கசிப்பும் மதுப்பிரியர்களுக்கு போதையுடன் கூடிய உற்சாகத்தை தருகின்ற போதிலும் அவர்களின் குடும்பங்களின் எதிர்காலம் சுபீட்ச வாழ்க்கை முறையில் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

பதுளை மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் வெகுவாக குறைவடைந்திருந்தன. சில தோட்டங்களில் கசிப்பு அறவே இல்லாது ஒழிக்கப்பட்டிருந்தது. இதற்கு இப்பகுதியில் கடமையில் இருக்கும் விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பு முக்கியமானதாக இருந்தது.

அண்மைக்காலமாக பதுளை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தோட்டங்களில் மீண்டும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதை காணமுடிகின்றது. உடுவர 6 ஆம் கட்டை பகுதியிலும், 2 ஆம் கட்டை ஹிங்குருகமுவ பகுதியிலும், ஹாலிஎல ரொசர்ட், பூனாக்கலை தோட்டத்தின் பல பிரிவுகளிலும் இன்னும் இங்கு பெயர் சுட்டிக் கூறப்படாத அதிகளவான தோடங்களின் பல பிரிவுகளிலும் இடம் பெற்றுவரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி பாவனையால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான இடங்களில் கசிப்பு நிலையங்கள் மினிபார்கள் போன்று மாலை வேளைகளில் தமது விற்பனையை மேற்கொண்டு வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறைந்த செலவில் அதிகளவான மதுவை அருந்துவதற்காக தூர இடங்களில் இருந்தும் அதிகளவானோர் வருகின்றனர்.

போயா மற்றும் அரச விடுமுறை தினங்களில் அரச அங்கிகாரம் பெற்ற பார்கள் மூடப்படும்போது, தோட்டங்களில் கசிப்பு விற்பனை செய்பவர்களிடம் மது அருந்தும் நோக்கில் மிகத் தூர இடங்களில் இருந்தும் மதுவுக்கு அடிமையானவர்கள் வருவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

மதுவை அருந்தும் இவர்கள் அதிகரித்த போதையில் ஊர் மக்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதால், அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், மாணவர்களின் கல்விச் செயற்பாடு, தூர இடங்களில் தொழிலுக்குச் சென்று மாலையில் வீடுகளுக்குத் திரும்பும் யுவதிகளின் பயணம் என்பவற்றுக்கு இடை யூறுகள் ஏற்படுகின்றன.

சில இடங்களில் பிரதேச முக்கியஸ்தர்களின் ஒத்துழைப்பும், இக்கசிப்பு விற்பனையாளருக்கு கிடைப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

அடிக்கடி நகரங்களுக்கு வரும் இவர்கள் இவ்வுற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை கடை களில் கொள்வனவு செய்து கசிப்பு விற்பனையாளர்களுக்கு கொடுக்கின்றனர். பொலிஸ் பிரச்சினை என்று வரும் போது குறிப்பிட்ட விற்பனையாளர்களை பாது காக்க மறைமுகமாக முயல்கின்றனர். இதனால் கசிப்பு விற்பனையாளர்கள் எவ்வித தங்குதடையுமின்றி தமது வியாபாரத்தை கொண்டு செல்கின்றனர்.

பல வருடங்களாக பொலிஸாரால் ஒழிக்க முடியாதிருந்த கசிப்பு விற்பனையை வெல்கொல்ல பகுதியிலுள்ள விசேட அதிரடிப்படையினர் மிகவும் துணிச்சலாக முற்றாக ஒழித்து, விற்பனையாளர்களுக்கு எதிராக பெரியளவில் தண்டப்பணத்தையும் அறவிடும் வகையில் சட்ட நடவடி க்கைகயையும் மேற்கொண்டிருந்தனர். இது மக்கள் மத்தியில் புது நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் சற்றுகாலம் ஓய்ந்திருந்த கசிப்பு மீண்டும் தோட்டங்களில் தலைதூக்கியிருப்பது மக்களுக்கு அசௌகரியத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மலையக மக்களின் முன்னேற்றத்திற்கு மிகப் பெரிய தடைக் கல்லாக இருக்கும் மதுபாவனையை தோட்டங்களிலிருந்து அறவே ஒழிக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இல்லாவிடின் எமது சமூகமும் இளைஞர் சமுதாயமும் பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும். எனவே இவ்விடயத்தில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மீண்டும் கரிசனை காட்ட வேண்டும். இதற்கு பொறுப்பு மிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிடில் மலையகம் மீட்சி பெறாது.

**ஹாலிஎல நிருபர்**

## வாரம் ஒரு மடல்

### செந்தில் தொண்டமானுக்கு ஓர் மடல்

**வணக்கம்!**

மலையகத்தின் முக்கிய அரசியல் கட்சியும் பெரிய தொழிற்சங்கமுமான இ.தொ.கா.வின்
அரசியல் வாரிசுகளில் நீங்களும் ஒருவர் என்பது பெருமைக்குரிய விடயமே, அரசியலில்
நுழைந்து குறுகிய காலத்திலேயே பிரபலமாகிவிட்ட நீங்கள் இ.தொ.காவின் முக்கிய
புள்ளி என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஊவா- மாகாணத்தில் இ.தொ.கா வின்
நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் தங்களுடைய சேவைகள் தொடர்பாக யாரும் விமர்சிக்க
முடியாது. இருப்பினும் தங்களுடைய அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக சில வினாக்களை
முன்வைக்க விரும்புகின்றோம்.

* திகாம்பரம் பதுளைக்கு வந்த சமயம் முட்டை, தக்காளி வீச்சு, வடிவேல் சுரேசுடன்
முறுகல், மேதின கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக பூனாகலையில் தொழிலாளர்
மீது தாக்குதல் என உங்கள் மீது குற்றம் சுமத்தப்படுகிறதே இது உங்கள் அரசியல்
வாழ்க்கைக்கு குந்தகமாக அமையாதா? மேலும் உங்கள் கட்சியின் நற்பெயருக்கு (?)
கலங்கமில்லையா?

*திகாம்பரத்தின் கட்சியில் இருந்து இ.தொ.கா விற்கு தாவியவர்களே பூணாகலை
சம்பவத்திற்கும் காரணமானவர்கள் என கூறியுள்ளீர்கள் சரி அப்படியாக (?)இருந்தால் அந்த
காடையர்களுக்கு எதிராக தாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

அவர்களை கட்சியில் (இ.தொ.கா.வில்) இருந்து விலக்கியதாகக் கூட கூறாதது ஏன்?

*ஊவாவில் நடக்கும் முரண்பாடுகளில் ஏனைய மாகாணசபை உறுப்பினர்களை விட
தங்களுடைய பெயர் அதிகம் பேசப்படுவது நீங்கள் அறியாதது அல்ல இது தங்களுடைய சுய
விளம்பரத்திற்காக செய்வதா?

இவற்றை எமக்கு உதயசூரியன் ஊடாக தெளிவுப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்
கொள்கிறோம்

மீண்டும் ஒரு மடலில் சந்திக்கும் வரை

**நன்றியுடன்**

**காவியன்**

# மறக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

சிறு வயதிலிருந்தே நமக்கு நினைவு வைத்துக்கொள்ள சொல்லித் தருகிறார்கள். படிக்கும் பாடமாகட்டும், மற்ற விடயங்கள் ஆகட்டும் அதிகமாய் நினைவு வைத்துக் கொள்வது எல்லோராலும் பாராட்டப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக அதையும் விட முக்கியமான கலை ஒன்றை யாரும் நமக்கு சொல்லித் தருவதில்லை. அந்தக் கலை மதிப்பெண்கள் வாங்கித் தராதென்றாலும் மன அமைதியை அடைய வைக்கும். அதுதான் மறக்கும் கலை.

நம் மனதில் நாம் சேர்த்து வைத்துள்ள நினைவுகளில் எத்தனை நினைவுகள் நம் மனதில் ரணங்களாக இருக்கின்றன. எத்தனை நினைவுகள் வரப்பிரசாதமாக இருப்பதற்கு பதிலாக சாபக்கேடாக இருக்கின்றன.

ஒவ்வொரு முறை நினைவுபடுத்தப்படும் போதும் எப்படியெல்லாம் நாம் நிம்மதியில்லாமல் தவிக்கிறோம்.

பழைய தமிழ் திரைப்படப்பாடல் போல நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா? என்று எத்தனை முறை நமக்குள்ளே கேட்டு நொந்திருக்கிறோம்? அப்படி நிறையவே நம் மனதில் சேர்த்து வைத்துள்ளோம். கடலளவு பலரும் சேர்த்து வைத்திருக்கிறோம். அலைகளாய் ஓயாமல் எழுந்து அவை நம்மை அழுத்துகின்றன. கடந்ததெல்லாம் பழங்கதை ஆகாமல் நம்மை நிகழ் காலத்திலும் வாழ விடாமல் செய்கின்றன.

அவற்றில் பெரும்பாலானவை அடுத்தவர்கள் நமக்குச் செய்த துரோகங்களாகவும், அவர்கள் நம்மை இழிவு படுத்திய நிகழ்ச்சிகளாகவும் இருக்கின்றன.

பிரபல ஆங்கில எழுத்தாளர் டேல் கார்னகி கூறுவார்: நம் எதிரிகளை நாம் அதிகமாய் வெறுக்க வெறுக்க அவர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்கிறோம். அவர்களால் நாம் நம் தூக்கத்தையும், சந்தோஷத்தையும் இழக்கிறோம். அவர்களால் நாம் எப்படி நிம்மதியின்றித் தவிக்கிறோம் என்று மட்டும் அவர்களுக்குத் தெரியவந்தால் நிஜமாகவே அவர்கள் ஆனந்தக் கூத்தாடுவார்கள். நமது வெறுப்பு அவர்களை ஒன்றும் செய்வதில்லை. மாறாக நமது நாட்களை அது நரகமாக்குகின்றது. அவர் கூறியதில் பெரிய உண்மை அடங்கியிருக்கிறது.

நமக்கு இழைக்கப்படும் நன்மைகளை நாம் தண்ணீரில் எழுதுகிறோம். தீமைகளையோ கல்லில் செதுக்குகிறோம். நண்பர்களை விட நம் நினைவுகளை எதிரிகளே அதிகமாக ஆக்கிரமிக்கிறார்கள். இதை நாம் உணர்வதாகவே தெரிவதில்லை.

சிலர் நம்மிடம் மிக நன்றாகப் பழகியிருப்பார்கள். ஏதோ ஒரு சிறு மனஸ்தாபம் அவர்களுடன் ஏற்பட்டால் அதைப் பெரிதுபடுத்தாமல் இருக்க நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. எத்தனையோ நல்லது உள்ள இடத்தில் ஓரிரு குறைகள் இருப்பது பெரிய குற்றமல்ல. நம்மிடம் குறைகள் இல்லையா? குறைகளே இல்லாத அந்த தனிப்பெரும் தன்மை இறைவனைத் தவிர யாரிடம் இருக்கிறது? திருவள்ளுவர் கூறுவார்-

*கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்று நன்று உள்ளக் கெடும்*

இராமன் செய்தார்,




திருவள்ளுவர் சொன்னார் என்பதற்காக மறக்கவும் மன்னிக்கவும் கூறவில்லை. நம் நிம்மதிக்காக, மன அமைதிக்காக மன்னித்து மறப்பது உத்தமம். குறுகிய வாழ்க்கையில் நாம் சாதிக்கவும், சந்தோஷப்படவும் வேண்டுமானால் இறந்த காலம் என்ற பிணத்தை நம்முடன் கட்டிக் கொண்டு அலைவது முட்டாள்தனம். இறந்ததைப் புதையுங்கள். கட்டிக் கொண்டு காலம் முழுவதும் புலம்பாதீர்கள்.

கல்குலேட்டர் உபயோகிக்கும்போது ஒரு கணக்கு முடிந்த பின்னர் அதை அழித்து விட்டு பின்பு அடுத்த கணக்கு போட்டால் தான் சரியான விடை கிடைக்கும். அதைச் செய்யாமல் தொடர்ந்து கணக்கு போட்டுக் கொண்டே போனால் தவறான விடை தான் வரும். இது நம் வாழ்க்கைக்கும் பொருந்தும். நிகழ்காலத்தில் கவனமாக வாழுங்கள். அதைவிட்டு பழைய கவலைகளில் நிகழ்காலத்தை கோட்டைவிட்டால் இந்த நிகழ்காலத்திற்கும் சேர்த்து எதிர்காலத்தில் வருந்த வேண்டி இருக்கும்.

சிலர் மறக்க என்று மதுவையும் போதைப் பழக்கத்தையும் நாடுகிறார்கள். இதை விட முட்டாள்தனம் வேறிருக்க முடியாது. தற்காலிகமாக நிம்மதி கிடைக்கிற மாதிரி தோன்றினாலும், இது நம்மை பரிபூரணமாக அழித்து விடும். கவலையை மறக்க போதையை நாடுபவன் பின்பு போதையை மறக்க படாத பாடு பட நேரிடும்.

அரைகுறை ஆராய்ச்சியும் அலசலும் தான் சிலவற்றை மனதிலிருந்து முழுவதுமாகக் களையத் தடையாக இருக்கின்றன. முழுவதுமாய் சிந்தித்து உண்மையை உணர முடிந்தால், அந்த உண்மையே ஒருவனை விடுவிக்கும்.

தேவையற்ற, மறக்கப்பட வேண்டிய ஒரு எண்ணம் அடிக்கடி உங்களை தொந்தரவு செய்யுமானால் அதை முழுமையாக கவனமாக உணர்வு பூர்வமாக ஒரு காகிதத்தில் எழுதுங்கள். பின்பு சரி மனமே நீ சொல்வதெல்லாம் சொல்லியாகி விட்டது. உன் வேலை முடிந்தது என எண்ணி அக்காகிதத்தை கவனத்துடனும், உறுதியுடனும் எடுத்து சுக்கு நூறாகக் கிழித்துப் போடுங்கள். அந்த எண்ணங்களின் தாக்கத்தில் இருந்து விடுபடுங்கள்.

வாழ்வில் நல்ல குறிக்கோள் ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருந்தால், அதை அடைய வேண்டும் என்று உள்ளே ஒரு அக்னி இருந்தால் எல்லாவற்றையும் மறந்து உற்சாகத்தோடு வாழ்க்கையைத் தொடர முடியும்.

குறைகளும் நிறைகளும் எல்லோரிடமும் இருக்கின்றன. எதைப் பெரிதுபடுத்துகிறோமோ அவையே அதிகமாய் மனதில் தங்குகின்றன. வாழ்வது ஒரு முறை. அது குறைகளின் கணக்கெடுப்பாக இருக்க வேண்டாம். கவலைகளின் தொகுப்பாக இருக்க வேண்டாம். நல்லதை நினைவில் வைப்போம். தீயதை மறக்கக் கற்போம்.

## இரண்டு நண்பர்கள்

இரண்டு நண்பர்கள் ஒரு வீதியின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிரில் ஒரு பை கிடந்தது. அதை ஒருவன் எடுத்துப் பார்த்ததில் பணம் இருந்தது. மற்றவன் சொன்னான், ''நமக்கு நல்ல யோகம், இன்று எதிர்பாராத விதமாக நமக்குப் பணம் கிடைத்துள்ளது.''



அதற்கு முதல்வன் சொன்னான், ''நமக்கு என்று சொல்லாதே. எனக்கு என்று சொல் நான் தானே பையை எடுத்தேன்.'' என்றான்.

சிறிது தூரம் சென்றவுடன் ஒருவன் ஒரு காவலரைக் கூட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தான். அவன் தான் பையின் சொந்தக்காரன் என்பதை அறிந்து கொண்டு, ''நமக்கு பிரச்சினை வரும்போல் இருக்கிறதே,'' என்றான் பையை எடுத்தவன். நண்பன் சொன்னான், ''நமக்கு என்று சொல்லாதே, உனக்கு என்று சொல்,'' என்றான்


பிறருக்கு உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர் பார்க்க முடியாது.

## நனையும் குழந்தை

கிழிந்த ஓலைக் குடிசைக்குள் இருக்கும் தாய் கனத்துப் பெய்யும் மழையில் தன் கைக்குழந்தை நனைந்து விடக்கூடாதே என்று தன் முதுகையே கூடாரமாக்குவாள். அப்படியும் அக்குழந்தை நனையும், தாயின் கண்ணீர்த்துளிகளால்.

--மேனாட்டுக் கவிதை ஒன்றிலிருந்து

# பயோ Data by உதயசூரியன்



பெயர் :- அருள்சாமி

மறந்து போன பதவி :- மத்திய மாகாண கல்வி அமைச்சர் .

தற்போதைய பதவி:- ஜனாதிபதியின் இணைப்பாளர்(தேர்தலில் தோற்பவர்களுக்கு கிடைக்கும் பதவி தானே?).

தற்போதைய தொழில் :-இ.தொ.காவிற்கு ஆட்சேர்த்து கொடுப்பது.

தற்போதைய நண்பர்கள் :- இ.தொ.கா வில் இருந்து பிரிந்து சென்று மீண்டும் அதில் ஒட்டிக் கொண்டவர்கள்.

எதிரிகள் :- இ.தொ.கா வை விமர்சித்து பிழைப்பு நடத்துபவர்கள்(சூப்பர் ....என்ன விஸ்வாசம்).

பிடித்த விடயம்:- அடிக்கடி கட்சி மாறி மக்களை குழப்புவது (நீங்கள் மட்டுமா? நிறையப் பேர் அப்படிதான்.)

பிடிக்காத விடயம்:- ஒரே கட்சியில் நீண்ட நாள் இருப்பது.

மறக்க முடியாதது:- என் சேவைகளை கண்டு கொள்ளாமல் மக்கள் என்னை தோல்வியடைய வைத்தது.

ஒரே சந்தோஷம்:- இ.தொ.காவில் இணைந்து தொழிற்சங்க பிரிவு பணிப்பாளராக பதவி பெற்றது.

அரசியலில் கற்றுக் கொண்டது:- பணம் இல்லாதவன் பிணம் என்பது போல பதவி இல்லாதவனும் பிணம் தான் என்பதை.

கட்சி மாறியது தொடர்பாக:- அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது தானே? (என்ன ஒரு பன்ஞ்....).

அடுத்த இலக்கு:- மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சராவதற்கு அடித்தளம் இடுவது (ஹி...ஹி.... அம்மணிக்கு ஆப்போ?).

(யாவும் கற்பனை)

எம்.தாசன்

# நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தினூடாக உதவி!

கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் நுவரெலியா மாவட்டத்தில் பாதிப்படைந்தவர்களில் ஒரு பகுதியினருக்குத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப தொழிலாளர் தேசிய சங்கத்தின் உயர் மட்டக் குழு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்தது.

இந்த விஜயத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தொழிலுறவு மற்றும் நிருவாகத்திற்கான சிரேஷ்ட ஆலோசகரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான சிங்.பொன்னையா, பொதுச் செயலாளர் எஸ்.பிலிப், பிரதேச சபை உறுப்பினர்களான வி.சிவானந்தன், ஏ.ராஜமாணிக்கம், கல்யாணகுமார், கே.சுரேஸ்குமார், டொமினிக் மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மஸ்கெலியா சாமிமலை, போடைஸ் பிரதேசம் மற்றும் மேபீல்ட், ஸ்டைதன், சார்மஸ், கிறிஸ்டெல் பார்ம் ஆகிய தோட்டங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவிகளை வழங்கியுள்ளனர்.

மேலும், கொட்டகலை டிரைட்டன் தோட்டப் பிரிவுகளுக்கு விஜயம் செய்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளனர். தலவாக்கலை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஹொலிரூட், கட்டுகல தோட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களையும் லிந்துலை பேரம் தோட்டப்பகுதிகளில் பாதிப்படைந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு உதவுவதற்குத் தொழிலாளர் தேசிய சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அட்டன் நிருபர்






கடந்த செவ்வாய்க்கிழமை 21 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவை நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று ரம்பொடையில் வைத்து முப்பது அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த பஸ்ஸின் சாரதி உட்பட 24 பயணிகள் இருந்த நிலையில் பதினொரு பேர் படுங்காயத்திற்குள்ளாகினர். இவர்கள் கம்பளை ஆதார வைத்தியசாலையிலும், மேலும் இருவர் (சாரதியும், பயணி ஒருவரும்) கண்டி வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

டி.சந்ரு நாவலப்பிட்டிய




## யாரது

★ இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பாடியுள்ள ஓர் இந்தியத் திரைப்படப் பாடகர்.


★ இவர் 90 மலையாளம், 65 கன்னடம், 45 தெலுங்கு மற்றும் 65 தமிழ் திரைப்படப் பாடல்களை பாடியுள்ளார்.

★ இவர் சமய வழிபாட்டுப் பாடல்கள் மற்றும் திரையிசை தவிர்ந்த பாடல்களை கூடுதல் எண்ணிக்கையில் பாடியுள்ளார்.

★ இவர் சிறுவயதிலேயே கர்நாடக இசைப் பயிற்சியைத் துவங்கியிருக்கிறார்.

★ இவரின் மனைவியின் தமையன் ஒரு துடுப்பாட்ட வேகப்பந்து வீச்சாளர்.


இவர் யார்?




## சிந்தனைத்துளி

★ கடலைக் கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும் மலைகளையே துளைத்துச் செல்லும் வலிமை தோள்களுமே நமக்குத் தேவை.


வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.



1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி?

**படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...**

# வார்த்தைப் புதிர் - 60



### இடமிருந்து வலம்

01. இந்தியாவின் ஒரு ஊர். மகாகவி இங்கே பிறந்திருக்கிறார்.
06. ஔவைக்கு நெல்லிக்கனி தந்த மன்னன்.
08. நீர் வாழ் உயிரினம்.
09. இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவரின் பெயரின் பிற்பாதி.
11. தேவையற்ற பொருட்களை போட்டு வைக்கும் இடம்.
16. ஆண் அல்ல.
17. குன்று என்பதை இப்படியும் சொல்வார்கள்.
24. கற்பில் சிறந்தவள்.
26. தீ வளர்த்து செய்யும் வழிபாடு.

### வலமிருந்து இடம்

05. சதுரங்க விளையாட்டு ஆங்கிலத்தில்.
07. பாரம்.
13. இங்கே என்பதின் எதிர்ப்பதம்.
15. ஒருவகை ஆடு.
23. ஒரு வகை பூ.
25. அவன்-- ஓர் அணுவும் அசையாது என்பார்கள்.
29. இந்த இரண்டுடன் கட்டுப்பாடும் ஒரு மனிதனுக்கு அவசியமானது

### மேலிருந்து கீழ்

01. எமனின் வாகனம்.
02. ஆயிரம் கிலோ.
03. கடன் இதை முறிக்கும் (குழம்பியுள்ளது).
04. மன்மதனின் காதலி.
08. 'திரும்ப திரும்ப' என்பதைக் குறிப்பது.
12 வினா
14. மிருகத்திடமிருந்து மனிதனை வேறுபடுத்திக்காட்டுவது.
18. ஏற்றம் என்பதன் எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது).
19. முன்னாள் இலங்கை படைத்தளபதியின் பெயரின் ஒரு பகுதி.
22. விசேடமாக சமைக்கும் ஒருவகைச் சோறு.
23. வைபவத்திற்கு அழைக்கப்படுபவர் கடைசி எழுத்து இல்லை. 27. ஐம்புலன்களில் பிரதானமானது.

### கீழிருந்து மேல்

10. ஒரு அவரை இனத்துக் காய்கறி. (ஆங்கிலத்தில்)
11. இந்துக்கள் தெய்வமாக போற்றும் விலங்கு.
13. தாய்.
15. கண்ணீரை வரவழைப்பது.
20. பல குற்றங்களை செய்தவர்களை தண்டிக்க இந்தியாவில் அமுலிலிருக்கும் ஒரு சட்டம்.
28. குளிர்காலத்தில் உதவுவது.
29. திருமணம் ஆகாத இளம் பெண்.

# பணத்திற்கு பதிலாக மரணம்!

## வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்!!



சட்டம் ஒரு இருட்டறை. அந்த இருளுக்குள் தம் குற்றங்களை மறைத்து விடலாம் என எண்ணி சிலர் குற்றங்களைப் புரிகின்றனர். ஆனால் பலரின் அந்த எண்ணம் தவிடுபொடியாகி விடுகிறது! நியாயத்தின் பார் வையிலிருந்து யாரும் அவ்வளவு இலகுவாக தப்பிவிட முடியாது.

மூடி மறைக்கப்பட்டு புதைக்கப்பட்ட பிரேமசிறி யின் மரணமும் கூட அப்படித்தான்!

பெரலிகல கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பிரேமசிறி. இரண்டு பிள்ளைகளின் தந்தை. மனைவி ரொசலின்.

பிரேமசிறி பெரலிகல பிரதேசத்தில் விவசாயம் செய்துவந்த அதேவேளை அவரின் மனைவியான ரொசலினும் இரு பிள்ளைகளும் பெலியத்த, நெலுவ பிரதேசத்தில் வசிக்கின்றனர் . குடும்பத்தினர் மீது அதிக அன்பு கொண்ட பிரேமசிறி இரண்டுவாரங்களுக்கு ஒரு முறையாவது தனது மனைவி பிள்ளைகளை பார்ப்பதற்காக நெலுவ பகுதிக்கு சென்று வருவதுண்டு.

பெரலிகல பிரதேசத்தில் பிரேமசிறிக்கு மூன்றரை ஏக்கர் காணி இருந்தது. அதனை விற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனினும் இந்த விடயம் மனைவி ரொசலினுக்குத் தெரியாது.

சில வாரங்களாக பிரேமசிறி மனைவி பிள்ளை களைப் பார்க்க வீட்டுக்கு வரவில்லை. இதற்கான கார ணம் புரியாது ரொசலினும் பிள்ளைகளும் பிரேமசிறியின் வருகைக்காக காத்திருந்தனர்.

இந்த வேளையில்தான் பெரலிகல பிரதேசவாசியான ஜயசிறி என்பவரை பிரேமசிறியின் மனைவி ரொசலின் சந்தித்த போது ஒரு அதிர்ச்சிகரமான தகவலை அவர் கூறினார்.

"அக்கா பிரேமசிறி அண்ணா அந்தக் காணியை விற்றது அநியாயம்தானே. அதைவிட அதிகமான விலைக்கு அதனை விற்றிருக்கலாம்."

இந்தச் செய்தி கேட்டு ரொசலின் அதிர்ச்சியடைந்தாள். "என்ன காணியை விற்றுள்ளாரா? எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாதே...." என குழம் பினாள்.

இது தொடர்பான உண்மையை அறிந்துகொள்வதற்காக அன்றே கணவனை சந்திப்பதற்காக பெரலிகலவிற்கு சென்றுள்ளாள்.

அங்குசென்று பார்த்தபோது தனது கணவனுக்குச் சொந்தமான காணியை விமலசேன என்பவர் சுத்தம் செய்து கொண்டிருந்துள்ளார். பிரேமசிறியும் அங்கி ருக்கவில்லை! அவர் எங்கு சென்றார் என்றும் தெரிய வில்லை.

காணி கைமாறியது எப்படி? பிரேமசிறி எங்கே? அவருக்கு என்ன நடந்தது? காணி விற்ற பணத்தை என்ன செய்தார்? இந்தக் கேள்விகள் ரொசலினைத் துளைத்தெடுக்க பதில் கிடைக்காது தவித்தாள்.

நடந்தது என்ன?

கடந்த மார்ச் 13 ஆம் திகதியன்று வழக்கொன்றுக்காக திஸ்ஸமஹாராம நீதிமன்றத்துக்கு சென்றிருந்த பிரேமசிறி பெரலிகல பிரதேசத்தைச் சேர்ந்த விமலசேன என்பவரை சந்தித்துள்ளார். அப்போது பிரேமசிறி தனது காணியை விற்பது தொடர்பாகவும் கூறியுள்ளார்.

விடயத்தை அறிந்து கொண்ட விமலசேன ஐந்து இலட்சம் ரூபாவிற்கு காணியைத் தந்தால், தானே அதைக் கொள்வனவு செய்துகொள்கிறேன் என கூறியுள்ளார்.

தனது மூன்றரை ஏக்கர் காணியை ஐந்து இலட்சத்துக்கு கொடுப்பதற்கு பிரேமசிறியும் இணங் கினார், இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறி சமாதான நீதிவான் ஒருவரை சந்திக்கச் சென்றனர். சத்தியக்கடதாசி மூலம் காணியை கைமாற்றுவதற்காக சென்ற இருவரும் சாட்சிக் கையெழுத்திடுவதற்காக அப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய திணைக்கள உத்தயோகத்தர் ஒருவரையும் அழைத்துச் சென்றனர். இவ்வாறு அம்மூவரும் சமாதான நீதிவான் ஒருவருடைய வீட் டுக்குச் சென்றதும் காணிவிற்பனை விடயம் தொடர்பாக அவரிடம் கூறி ஆலோசனை கேட்டனர்.

மறுநாள் இதுதொடர்பான சகல ஆவணங்களையும் சமர்ப்பித்ததன் பின் காணி விமலசேனவின் பெயருக்கு எழுதப்பட்டது. எனினும் அவ்வேளையில் பணம் கைமாற்றப்படவில்லை. சமாதான நீதிவான் தனது உறுதிப்படுத்தலுக்கு முன்னர் விமலசேனவிடம் பணம் எங்கே எனக் கேட்டுள்ளார்.

விமலசேன பணத்தினை வீட்டில் வைத்து கொடுப்பதாகவும் சத்தியக் கடதாசியில் உறுதிப்படுத்தித் தருமாறும் கோரியுள்ளார். அதற்கு பிரேமசிறியும் விருப்பம் தெரிவித்தமையால் சாட்சியின் கையொப்பத்தினையும் பெற்றுக்கொண்ட சமாதான நீதிவான் சத்திய கடதாசியை உறுதிப்படுத்தி வழங்கினார்.

பின் விவசாய உத்தியோகத்தர் விடைபெற்றுச் சென்று விட் பிரேமசிறி காணிக்கான பணத்தினை பெற்றுக்கொள்வதற்காக விமலசேனவின் வீட்டுக்குச் சென்றுள்ளார். கடந்த மார்ச் 14 ஆம் திகதியே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதன் பின் பிரேசிறியை யாரும் காணவில்லை.

* * *

பிரேமசிறி எங்கே? என மனவி ரொசலின் விமல சேனவைக் கேட்க,

"அவர் கடலுக்கு போவதாக சொல்லிவிட்டு சென்றார்" என விமலசேன கூறியுள்ளார்.

விமலசேன கூறிய இந்த விடயமானது ரொசலினுக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதாவது பிரேமசிறி கடலுக்குச் செல்வதை நிறுத்தி சிலகாலமாகிறது. பணத்தேவைக்காக சென்றார் என்றா லும் ஐந்து இலட்சம் கையில் பண்ம் இருக்கும் போது எதற்காக அவர் கடலுக்கு செல்ல வேண்டும் என்ற நியா யமான கேள்வி அவளை உறுத்தியது.

லுணுகம்வேஹேர பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இதுபற்றி ரொசலின் முறையிட்டுள்ளார்.

காணியை விற்ற பிரேமசிறி பணத்து டன் எங்கேயாவது சென்றுவிட்டாரா? அல்லது அவரை யாராவது கொலைசெய்து விட்டார்களா? இல்லையெனின் அவரின் காணாமல் போதலுக்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா? என பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

காணியை பெற்றுக்கொண்ட விமலசேனவின் மீது சந்தேகம் ஏற்படவே விமலசேனவை கைது செய்துள்ளனர்.

விமலசேனவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தன்னிடம் காணிக்கான ஐந்து இலட்சம் ரூபா பணத்தினை பிரேமசிறி பெற்றுக்கொண்டதாகவும் பின்னர் கடலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றதாகவும் வாக்குமூலம் வழங்கியுள்ளார். இருந்தபோதும் பொலிஸார் அதனை நம்பவில்லை.

காணி விற்றலில் சம்பந்தப்பட்ட சாட்சி கையெழுத்திட்டவர் மற்றும் சமாதான நீதிவான் ஆகியோரிடம் வாக்கு மூலங்களைப் பெற்றனர். விமலசேனவின் மீதான சந்தேகம் பொலிஸாருக்கு அதிகரித்தது.

இறுதியில் பிரேமசிறி படுகொலை செய்யப்பட்டு தென்னந் தோட்டத்தில் புதைக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

பணத்தை பெற்றுக்கொள்வதற்காக விமலசேனவின் வீட்டுக்குச் சென்ற பிரேமசிறி அங் கேயே தங்கியிருந்தார். அன்று மாலை இருவரும் மது அருந்தியுள்ளனர். பிரேமசிறி, போதையில் ஆழ்ந்த தும் விமலசேன பொல்லொன்றை எடுத்து அவரின் தலையில் அடித்துக் கொலை செய்துளளார். பின் சடலத்தை அருகில் இருந்த தென்னந்தோப்பில் குழிதோண்டி புதைத்துவிட்டு அதன்மீது தென்னங்கன்றை நாட்டியுள்ளார். இது குறித்த வாக்குமூலங்களை விமலசேன பொலிஸாருக்கு வழங்கினார்.

விமலசேன தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். எந்தவொரு குற்றத்தையும் செய்துவிட்டு நிரந்தரமாக தப்பித்து இருக்கமுடியாது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

மணி

# வியாழ மாற்றம் இலங்கைக்கு அனுகூலமான பலனைத் தருமா?

வியாழ மாற்றம் என்ன செய்யப்போகின்றது? அரசியலிலும் ஆத்மீகத்திலும் இக்கேள்வி எழுப்பப்படுகின்றது.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மே 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 9 மணி 24 நிமிடத்தில் இடபராசியினின்றும் விலகி மிருகசீரிடம் 3 ஆம் பாதத்தில் மிதுன ராசியில் பிரவேசிக்கின்றார் வியாழ பகவான்.

அடுத்த ஒரு வருடம் வரையில் மிதுன ராசியில் வியாழ பகவான் நிற்கையில் உலக நாடுகள் பலவற்றிலும் அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை என்று வாக்கிய பஞ்சாங்கப் பலன்கள் கூறுகின்றன. வியாழ மாற்றம் திருக்கணித பஞ்சாங்கப்படி மே 31 வெள்ளிக்கிழமை காலை 6.50 இற்கு இடபராசியினின்று நீங்கி புதனின் வீடாகிய மிதுன ராசியில் 19.06.2014 வரை சஞ்சரிப்பார் என்று கூறப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்களைக் குறிக்கும் மேட ராசிக்கு வியாழ பகவான் 3 ஆம் வீட்டுக்கு மாற்றம் அடைவது மத்திம நற்பலன்களையே காட்டுவதாகவும் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குரிய தீர்வு காலதாமதத்தை உருவாக்கும் என்றும் எவ்விடயத்திலும் சாதுர்யமாக நடந்துகொள்ளுதல் வேண்டும் என்றும் பிறநாடுகளின் ஆதரவு மனதிற்கு நிறைவைக் கொடுக்கின்றது என்றும் திருக்கணித பஞ்சாங்கப் பலன்கள் கூறுகின்றன. இப்பின்னணியில் கடந்தவாரம் இலங்கை விவகாரம் தொடர்பாக இடம்பெற்ற ராஜதந்திர நகர்வுகளைப் பார்ப்போம். இலங்கைக்கான அமெரிக்காவின் தூதராக தற்போது இருப்பவர் திருமதி மிச்சேல் சிசேன் ஆவார்.

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை அவசரமாகச் சந்தித்தாகவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். சந்திப்பு கொழும்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்கத் தூதரைச் சந்தித்தனர். இலங்கை இனப்பிரச்சினையின் தற்போதைய தரை நிலவரம் தொடர்பாக விவரமாக அறிந்துகொள்வதில் அமெரிக்கத் தூதுவர் அக்கறை காட்டினார். சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இச் சந்திப்பில் பங்குபற்றிய சம்பந்தனும் சுமந்திரனும் அதைச் சரியாகப் பயன்படுத்தினர்.

வடக்கு கிழக்கு, தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம். இதனை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் செய்துகொண்ட உடன்படிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. 2009 மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்று அடையாளப்படுத்தும் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் விதத்தில் கொழும்பு அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை இராணுவத்தின் துணையுடன் தீவிரமாக மேற்கொண்டு வருவதை புள்ளிவிபரங்களுடன் அமெரிக்கத் தூதரின் கவனத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் கொண்டுவந்தனர்.



நாடு சுதந்திரம் பெற்ற நாட் தொடக்கம் கிழக்கு மாகாண த்தில் தமிழ்பேசும் மக்களின் இனப்பரம்பல் விகிதத்தை மாற்றி அமைக்கும் விதத்தில் அரசாங்கம் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டது பற்றியும் கூட்டமைப்புத் தலைவர்கள் அமெரிக்கத் தூதருக்கு நினைவுபடுத்தினர்.

கிழக்கில் அன்று செய்ததுபோன்று முள்ளிவாய்க்கால் போர் முடிவுற்ற பின்னர் வடக்கிலும் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முயற்சியில் தற்போதைய கொழும்பு அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் கூட்டமைப்புத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். அக்கட்டத்தில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபடி நடைபெறுமா? என்பது பற்றியும் அமெரிக்கத் தூதர் கூட்டமைப்புத் தலைவர்களிடம் கேட்டறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

மாகாண சபைகளுக்கு 13 ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை இரத்துச் செய்துவிட்டு வடக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் பற்றியும் சந்திப்பில் ஆராயப்பட்டது. உலகின் ஒரேயொரு வல்லரசான அமெரிக்காவின் இலங்கைக்கான துதர் இனப்பிரச்சினை விவகாரம் குறித்து ஆழமாக விசாரித்து அறிந்துகொண்டார்.

அதேவேளை கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அலுவலக தொலைபேசி குரல் எழுப்பியது. மறுபக்கத்தில் இருந்து இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசினார். பிராந்திய வல்லரசான இந்தியாவின் கருத்து இலங்கை வெளியுறவு அமைச்சருக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக தொலைபேசி மூலம் உணர்த்தப்பட்டது. 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைக்கும் நடவடிக்கையில் கொழும்பு அரசாங்கம் ஈடுபடக் கூடாது என்று அழுத்தந் திருத்தமாக இந்திய வெளியுறவு அமைச்சர் தனது இலங்கை சகபாடிக்கு தெரியப் படுத்தினார்.

அத்துடன் இந்திய அமைச்சர் நிறுத்திக் கொள்ள வில்லை; வடக்கில் போரின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் உறுதிக் காணிகளை இராணுவம் தனது தேவைக்கென கையகப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் அப்படி கையகப்படுத்துவது அரசாங்கமே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிராகரிப்பதாக அமையும் என்றும் இந்திய அமைச்சர் கூறினார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் ஜெனிவாவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 23 ஆவது அமர்வு எதிர்வரும் செப்டெம்பரில் கூடவிருக்கிறது. அங்கு பேரவை ஏற்கனவே, இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுவதில் காணப்பட்ட முன்னேற்றம் குறித்து கொழும்பு அரசாங்கம் வாய்மூல அறிக்கை வெளியிடவேண்டும். அத்துடன் நவம்பரில் கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு குறித்து அமைப்பின் அமைச்சர் மட்டக் கூட்டமும் செப்டெம்பரில் தான் நடத்தப்படவுள்ளது. அடுத்தவாரம் இடம்பெறவுள்ள வியாழ மாற்றம் இவற்றை எவ்வாறு பாதிக்கப்போகின்றது? அரசியல் சோதிடர்களின் ஆலோசனையை அரசாங்கம் நம்பியிருக்கிறதா? காலம் பதில் கூறும்.

அநாமிகன்

# 106 ஆவது வயதில் 73 வயது தாத்தாவை திருமணம் செய்த பாட்டி



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் 106 ஆவது வயதில் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார். மர்ஜோரி ஹெம்மோர்ட் எனும் இப்பெண்ணை 73 வயதான கெவின் கிரவ்போர்ட் என்பவர் திருமணம் செய்துள்ளார்.

இவர்கள் இருவரும் மெல்போர்ன் நகரிலுள்ள முதியோர் இல்லமொன்றில் வசிக்கின்றனர். மூன்று வருடங்களுக்கு முன்னர் இவர்கள் முதல் தடவையாக சந்தித்தனராம். 106 வயதான மாஜோரிக்கு இதுவே முதலாவது திருமணமாகும்.

நாம் இருவரும் ஒருவருக்காக ஒருவர் அன்பினால் உருகுகிறோம். பழைய நண்பர்களைப் போல் நாம் பழகினோம். வயது வித்தியாசம் ஒரு பொருட்டாக இருக்கவில்லை என்கிறார் மர்ஜோரி ஹெம்மோர்ட்.

மர்ஜோரி மிக இனிமையாகப் பழகுபவர், உற்சாகமானவர் என்கிறார் அவரின் கணவரான கெவின் கிரவ்போர்ட். மர்ஜோரி முன்னர் நூலக ஊழியராக பணியாற்றியவர். அவர் தனது 96 ஆவது வயதில் முதல் தடவையாக வெளிநாட்டுப் பயணமாக ஐரோப்பாவுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.




# நான்கு கால்களை உடைய அதிசய கோழிக்குஞ்சு...



சீனாவின் சாங்கு எனும் பிரதேசத்தில் காணப்படும் கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றில் வளர்ந்து வரும் கோழிக் குஞ்சு ஒன்றிற்கு நான்கு கால்கள் காணப்படுகின்றது.

இது தொடர்பாக அப்பண்ணையை நடாத்தி வருபவர் கருத்து தெரிவிக்கையில் தான் 31 வருடங்களாக இப்பண்ணையை நடாத்தி வருவதாகவும், இதற்கு முன்னர் 3 கால்களை உடைய கோழிக்குஞ்சு ஒன்று அங்கு காணப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

# 13500 அடி உயரத்திலிருந்து பாய்ந்த 79 வயது பாட்டி

அமெரிக்காவைச் சேர்ந்த 79 வயதான பாட்டியொருவர் 13500 அடி உயரத்தில் வைத்து எயார் பிளேனிலிருந்து பரசூட் மூலம் தரையில் குதித்துள்ளார். கரோலின் மெய்ஸல்பேர்க் என்ற 79 வயதான பெண்மணியே இவ்வாறு கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி கார்டினர் எனுமிடத்திலிருந்து குதித்துள்ளார். பல வகையான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த பாட்டி, அவரது 3 வைத்தியர்களின் ஆலோசனைகளையும் மீறியே இவ் அபாயகரமான செயலை செய்துள்ளார். கரோலின் 2 தடவைகள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர். மேலும் நீரிழிவு, ஒஸ்ரியோபொறோஸிஸ் மற்றும் வாதம் உள்ளிட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தனது 79 ஆவது வயதில் துணிச்சலாக 13500 அடி உயரத்திலிருந்து குதித்துள்ளார். இதன்போது இவருடன் 60 வயதான பயிற்சியாளர் ஒருவரும் குதித்துள்ளார்.



இவர் அமெரிக்க இராணுவத்தில் 6 வருடங்கள் பணி புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது குறித்து கரோலின் கூறுகையில், குதிக்கும் போது எனது நெஞ்சுப் பகுதியில் மட்டும் சற்று வலி ஏற்பட்டது. மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் எனது 80 ஆவது பிறந்த தினத்தில் 10 நண்பர்களுடன் இணைந்து குதிக்கத் திட்டமிட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வயசுல என்னா ஒரு கொலைவெறி!



# நான்கு சிறுநீரகங்களுடன் உயிர்வாழும் அதிசயப் பெண்

பிரிட்டனைச் சேர்ந்த ஜெஸ்சிகா கர்பே (20) என்பவருக்கு வயிற்றின் வலது பகுதியில் கடுமையான வலி ஏற்பட்டதால் அவர் வைத்தியரை சந்தித்துள்ளார்.

அப்போது சிறுநீர் பரிசோதனை நடத்தப்பட்டது. அதில், சிறுநீர் தொற்று நோய் இருப்பது தெரிய வந்தது. அதற்குரிய மருந்து மாத்திரை வழங்கப்பட்டது. ஆனாலும் நோய் குணமாகவில்லை. எனவே, அவரது சிறுநீரகம் ஸ்கேன் செய்யப்பட்டது. அப்போது வலது புற சிறுநீரகத்துடன் 7 செ.மீற்றர் கட்டி இருப்பதை டாக்டர்கள் பார்த்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து 11 நாட்கள் கழித்து மீண்டும் பரிசோதனைகள் நடத்தப்பட்டது. அதில், அவருக்கு வலப்புறத்தில் 2 சிறுநீரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அறுவைச் சிகிச்சை செய்து அவற்றுடன் வளர்ந்த கட்டி அகற்றப்பட்டது. இதற்கிடையே, அறுவைச் சிகிச்சையின் போது இடது புறத்தில் மேலும் 2 சிறுநீரகங்கள் இருப்பது தெரியவந்தது.

இதன் மூலம் ஜெஸ்சிகாவின் உடலில் 4 சிறுநீரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது போன்று 4 சிறுநீரகங்களுடன் ஒரு மனிதன் உயிர் வாழ்வது மிகப்பெரிய வரப்பிரசாதம் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# வயிற்றில் வளரும் குழந்தையை அழகிப் போட்டியில் சேர்த்த தாய்



பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணொருவர் இன்னும் பிறக்காத, தனது வயிற்றில் வளரும் குழந்தையை குழந்தைகளுக்கான அழகிப் போட்டியாளர்களில் ஒருவராக சேர்த்துள்ளார்.

26 வயதான ஜென்னி ஒலிவர் எனும் இப்பெண் தற்போது 7 மாதக் கர்ப்பிணியாக உள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் அவருக்கு பெண் குழந்தை பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள குழந்தைகளுக்கான அழகிப் போட்டியில் தனது வயிற்றில் வளரும் குழந்தையையும் போட்டியாளர்களுக்கான பட்டியலில் இணைத்துள்ளார் ஜென்னி.

இக்குழந்தைக்கு எல்லா என பெயரிடவுள்ளதாக அவர் கூறுகிறார். ஜென்னிக்கு ஏற்கெனவே 10 வயதான மகளும் 7 வயதான மகளும் உள்ளனர். மூத்த மகளான ஜெஸிகா ஏற்கெனவே சிறுமிகளுக்கான அழகிப் போட்டிகளில் பங்குபற்றியவர். இந்நிலையில் தனது நடனத் திறமையும், ஜெஸிகாவின் அழகிப் போட்டி அனுபவமும் தனது இரண்டாவது மகள் அழகிப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு கைகொடுக்கும் என தான் நம்புவதாக ஜெஸிகா ஒலிவர் கூறுகிறார்.

# என்னாச்சி...!

## மனதைப் புரிந்து கொள்ளுங்கள்

நான் வேலை செய்யும் அதே அலுவலகத்தில் சுமார் முப்பது வயதுப் பெண்ணொருவர் வேலை செய்கிறாள். அவளது கணவர் சமீபத்தில் ஏதோ நோயினால் இறந்து போனார். அவர் இறந்து போன சில நாட்களிலேயே ஈமச் சடங்குகளை முடித்த கையோடு அவள் அலுவலகத்திற்கு வேலைக்கு வந்து விட்டாள்.

வேலைக்கு வந்தவள் வழமைபோல் வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்ய ஆரம்பித்தாள். அது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதுமட்டுமா அலுவலகம் முழுவதும் அவளைப்பற்றிய கதையாகத்தான் இருந்தது.

ஒருநாள் அவளிடம், ''ஆறுமாசம் வரைக்கும் வீட்டில் இருந்து மனதை தேற்றிக்கொண்டு வேலைக்கு வரலாமே!'' என்றேன். அதற்கு அவள், வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் நான் சிறையில இருக்கின்ற மாதிரி இருக்கிறது. எப்போதும் அவரது படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் மனது ரணமாகிறது. இதனால் துக்கம்தான் அதிகரிக்கிறது. அவரது பிரிவு தாங்காமல் நானும் இறந்துவிட முடியும். ஆனால், என்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கிறதே! கவலையைப் போக்கிற சக்தி காலத்தை விட கடமைக்குத்தான் இருக்கு என்று என் கணவர் அடிக்கடி சொல்வார். அதனால்தான் வேலையில் மூழ்கி கவலையில் இருந்து விடுபடலாம் என வேலைக்கு வந்து விட்டேன்.



ஆனால், இவளெல்லாம் ஒரு பெண்ணா என்ற ரீதியில் எல்லோரும் என் முதுகுக்குப் பின்னால் கதைப்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அவர்களைப் பற்றி நினைத்தால் அவர்களது பேச்சுக்கு மதிப்புக் கொடுத்தால் நான் வாழ்வது எப்படி? என கண்கலங்கக் கூறினாள்.

வாழ்க்கையை தைரியமாக எதிர்கொள்ளும் அவளைப் பார்த்தபோது பெருமையாக இருந்தது.

அதே சமயம் ஒரு பெண்ணின் மனதைப் புரிந்து கொள்ளாது கண்டபடி பேசுபவர்களை நினைத்தால் வெறுப்பாகவும் இருந்தது.

என்னுடைய ஆசிரிய நண்பருக்கு நேர்ந்த அனுபவம். வண்டியில் செல்லும்போது எதிர்வரும் வாகனத்தில் தேவையின்றி விளக்கு எரிந்தால் தன் விரல்களைக் குவித்தும் விரித்தும் சைகை செய்து விளக்கு எரிவதை சுட்டிக் காட்டுவது அவரது வழக்கம். எதிரில் வருபவர்களும் விளக்கை அணைத்துவிட்டு நன்றி சொல்வது வழக்கம். ஒருநாள் எதிரில் ஒரு பெண் தன் ஸ்கூட்டியில் விளக்கு எரிந்து கொண்டிருந்த நிலையில் வந்தார். இவரும் வழக்கம் போல் தன் விரல்களை குவித்தும் விரித்தும் சைகை காட்ட அப்பெண் அவரைப் பார்த்து முறைத்ததும் அல்லாமல் சரிதான் போடா என்று திட்டியும் சென்றுவிட்டார்.

ஓய்வு பெற்றுவிட்ட அந்த ஆசிரியர் ஒரு நிமிடம் அதிர்ச்சியில் உறைந்தார். அவர் சைகையால் சுட்டிக் காட்டியதை அந்தப் பெண் தவறாக புரிந்து கொண்டார் போலும். அன்றிலிருந்து யார் வண்டியில் விளக்கு எரிந்தாலும் இவர் சைகை காட்டுவதில்லை. நல்லதுக்குக் காலமில்லை!



## நல்லதுக்கு காலமில்லை!

தகவல் தொகுப்பு ஆர்.அபி



## காதலால் வந்த வினை

இந்த காலத்துப் பிள்ளைகள் காதலுக்காக எதையும் செய்ய துணிந்துவிட்டார்கள். காதலுக்காக, காதலனுக்காக தாய்தந்தையரையே கொன்ற சம்பவங்களை இப்போது கேள்விப்படுகிறோம்.

என் தோழியின் நெருங்கிய சொந்தக்காரப் பெண்ணொருத்திக்கு திருமணம். நெருங்கிய சொந்தம் என்பதால் அவளும் இரண்டு நாட்களுக்கு முன்னே திருமணத்திற் சென்றுவிட்டாள்.

திருமண வீடு களை கட்டியிருந்தது. பெண்ணுக்கு மூன்று அண்ணன்மார்கள். ஒரே தங்கை என்பதால் திருமணத்தை மிகவும் பிரமாதமாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஆனால் அன்று மாலையே மணப்பெண்ணைக் காணவில்லை. ஊர் முழுவதும் பத்திரிகை வைத்து சொந்த பந்தங்கள் கூடியிருக்கும் இவ்வேளையில் மணப்பெண்ணைக் காணவில்லை என்றால் எப்படியிருக்கும்.

அவள் ஒன்றும் சும்மா போகவில்லை. வீட்டில் உள்ள பணம், திருமணத்திற்காக வாங்கிவைத்த நகை, மற்றும் உடைகள் என்பவற்றை எடுத்துக் கொண்டே சென்றிருக்கிறாள்.

இவை எல்லாவற்றையும் விட மாப்பிள்ளை வீட்டாருக்கு என்ன தகவல் சொல்வது என்று தெரியாமல் அண்ணன்மார் விழி பிதுங்கி நின்றனர்..

அப்பெண் வேலை செய்த இடத்தில் ஒருவரை காதலித்தாளாம். இந்த விடயத்தை வீட்டில் சொல்ல தைரியமில்லை என்பதால் இருவரும் வீட்டைவிட்டு ஓடிவிட்டார்கள் என்ற செய்தி தெரியவந்தது.

காதலிப்பது தப்பில்லை அதற்காக தன் குடும்பத்தையும் தன் உடன் பிறந்த உறவுகளின் உள்ளத்தை சுக்குநூறாக உடைத்தெறிந்துவிட்டுத்தான் காதலை வாழவைக்க வேண்டுமா?

திருமணத்திற்கு முதல்நாள் வந்த தைரியம் திருமணம் பேசும் போதும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் போதும் ஏன் வரவில்லை. தன் காதலை குடும்பத்தாரிடம் தைரியமாக சொல்லியிருந்தால் அந்தக் குடும்பத்திற்கு இப்படியொரு தலைகுனிவும் அவமானமும் நேராதே!

எனவே பெண்களே! காதலிக்கும் இளசுகளே! பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் அவமானம் நேராமல் சரியான முடிவுகளை தைரியமாக எடுங்கள்!

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

மாணவர் முழுப்பெயர் : ..........................................................


கல்வி கற்கும் பாடசாலை :- ..........................................................

மாணவர்கள் விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
"கல்விக்குரல்" யாழ். தினக்குரல்,
இல. 336 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பகுதி I
எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

★ 1ஆம், 2ஆம் வினாக்களுக்கு உருவுக்குப் பொருத்தமான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

01) உரு குறிப்பதன் பிரகாரம் காற்றின் உதவியுடன் செல்லும் தோணி எத்திசை நோக்கிப் பயணிக்கிறது?




1. A திசை நோக்கி
2. B திசை நோக்கி
3. பயணிக்கவில்லை.

02) இப் பிராணி பற்றிக் குறிப்பிடக்கூடிய பொருத்தமான கூற்று



1. அழகு, இரைச்சல்
2. நோய், கொடியது
3. பற்கள், பறக்கும்

03) சரியான விடையின் இலக்கத்தைக் கொண்ட கூட்டினைத் தெரிவு செய்க.
**இவ்வெண் கூட்டினுள் இருக்கும் எண்களை கிடையாகவும் நிலைக்குத்தாகவும் கூட்டும் போது விடை 20 எனின், "A" எனும் கூண்டிற்குள் வர வேண்டிய எண் தொகுதி எது?**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 1 | 4 | 5 | 8 |
| 5 | 2 | 1 | 8 | 4 |
| 1 | 4 | A | | 5 |
| 8 | 5 | | | 1 |
| 4 | 8 | 5 | 1 | 2 |

1.

| | |
|---|---|
| 5 | 4 |
| 1 | 8 |


2.


| | |
|---|---|
| 4 | 3 |
| 2 | 1 |

3.


| | |
|---|---|
| 8 | 2 |
| 2 | 4 |

இங்கே இரு உருக்கள் பொருத்தப்பட்டு ஒன்றாக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தனித்தனியே வேறாக்கினால் கிடைக்கும் இரண்டு உருக்கள்

04) 



05) 


06) அருகில் தரப்பட்ட உருவின் பிரகாரம் பொதியின் நிறை யாது?




1. 2Kg 500g
2. 2Kg 750g
3. 2Kg 250g

07) தீக்குச்சிகள் சிலவற்றைக் கொண்டு ஆக்கப்பட்ட ஓர் அலங்காரம் இங்கே தரப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு முக்கோணங்கள் அமைக்க ஆகக் குறைந்தது எத்தனை தீக்குச்சிகள் தேவை?



1. 3
2. 2
3. 4

08) நான்காக மடிக்கப்பட்டுத் துவாரங்களிடப்பட்ட கடதாசி அட்டை ஒன்றை விரித்த போது உருவில் காட்டப்பட்டது போன்று வடிவம் ஒன்று பெறப்பட்டது. இவ் வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டை எத்தனை தடவை துவாரமிட வேண்டும் .



1. இரண்டு தடவை
2. எட்டுத் தடவை
3. நான்கு தடவை

ஆசிரியர்கள் : மு.ஜெயமதன், எஸ். நவகாந்தன்

09) கமலன் வீதியால் நடந்து சென்ற போது அவனது நிழல் அவனது காலின் கீழே விழுந்தது எனின், அவன் வீதியால் என்ன நேரம் சென்றிருப்பான் ?

1. காலை 10 மணி
2. மாலை 4மணி
3. பிற்பகல் 12 மணி

10) பச்சை மின் குமிழானது 3 நிமிடங்களுக்கொரு தடவை ஒளிரும், மஞ்சள் நிற மின் குமிழானது 4 நிமிடத்திற்கொரு முறை ஒளிரும். இறுதியாக இரண்டும் ஒளிர்ந்த நேரம் இரவு 9.00 மணியாகும். இதன் படி மீண்டும் இரண்டு மின்குமிழ்களும் ஒன்றாக ஒளிரும் நேரம் யாது ?

1. இரவு 9.12 இற்கு
2. இரவு 9.07இற்கு
3. இரவு 9.16 இற்கு

11) குமரனின் வயது 12 வருடங்கள் ஆகும். பரணியின் வயது குமரனின் வயதின் இரு மடங்கு ஆகும். தரணியின் வயது பரணியின் வயதின் 1/6 பங்கு ஆகும். எனவே பரணியின் வயது.

1. 4 வருடங்கள்
2. 8 வருடங்கள்
3. 5 வருடங்கள்

★ **பின்வரும் தொடர்கள் குறித்து நிற்கும் கருத்தினை தெரிவு செய்க.**

12) ஒருவர் தனது கருத்தைச் சொல்ல முடியாத தன்மையைக் குறித்து நின்று கூறக்கூடிய மிகவும் பொருத்தமான கூற்று:

1. அகத்தினழகு முகத்தில் தெரியும்
2. ஆப்பிழுத்த குரங்கு போல
3. ஊமை கண்ட கனவு போல


13) " **தோள் கொடுத்தல்**" என்ற தொடர் குறித்து நிற்பது

1. ஒருவருக்குத் தகுந்த நேரத்தில் உதவி செய்தல்.
2. பாரம் சுமந்து வருபவருக்கு எமது தோளைக் கொடுத்தல்.
3. ஒருவர் இன்னொருவரிடம் உதவி கேட்டல்.

14) " குப்பை கூளங்களைக் கண்ட இடங்களில் வீசாது குப்பைக் கூடைக்குள் போடவும்"

1. அறிவித்தல் முறை
2. விளம்பரம் செய்யும் முறை
3. அறிவுறுத்தல் செய்யும் முறை

15) எதிர்ப்பக்கங்கள் சமனான வடிவம் கொண்ட இச் சதுரமுகி வடிவான பெட்டியை விரித்து வைக்கும் போது அது காட்டும் சரியான வடிவம் எது?




16) அதிகாலையில் கோவில் மணி பக்தி பூர்வமாக ஒலிப்பது:

1. நித்திரை விட்டு எழுந்திடச் செய்வதற்கு
2. ஆலயங்களில் பூசை நடைபெறுவதால்
3. பூசகர் கதவு திறப்பதால்


17) ஆகாயத்தில் எப்போதும் இருக்கக் கூடியது :

1. நீல நிற வானம்
2. பறவைகளின் கூட்டம்
3. நட்சத்திரங்களின் கூட்டம்

18) இங்கிலாந்தின் நேரம் இலங்கை நேரத்தை விட 6 மணித்தியாலங்கள் குறைவானது. இதன் பிரகாரம் இங்கிலாந்து நேரம் மாலை 6.00 மணி இருக்கும் போது இலங்கை நேரம் :

1. பி. ப 11.00 மணி
2. மு. ப 1 .00 மணி
3. பி. ப 12.00மணி

★ **பின்வரும் உருக்களை அவற்றின் பெறுமதிக் கேற்ப அவதானிக்குக. அதனைக் கொண்டு 19ஆம், 20ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**




19) இந் நான்கு குறியீடுகளையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகவும் கூடிய பெறுமதியுள்ள எண்ணின் குறியீடு:

1. 

2. 

3. 

## வினாத்தாள் - 02

## 1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர் முழுப்பெயர் : - ........................................................

கல்வி கற்கும் பாடசாலை :- ........................................................

### பகுதி II

(01) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக .

அமெரிக்கா தேசத்தில் " கெந்தக்கி" என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் ஒரு சிறுவன் பிறந்தான். அவனது பெயர் ஆபிரகாம் லிங்கன் அவனுடைய பெற்றோர் வறிய வர்கள், பெற்றோருடன் சேர்ந்து லிங்கனும் வயலில் வேலை செய்வது வழக்கம். அதனால் அவன் பாடசாலைக்குச் சென்று கல்வியைக் கற்க இயலாதவனாக இருந்தான். ஆனால் அவ னிடம் படிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அவன் ஓய்வு நேரத்தில் பிறரிடம் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பான். அடக்கமும் நேர்மையும் உள்ள ஆபிரகாம் லிங்கன் பிற்காலத்தில் அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியானான்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i. ஆபிரகாம் லிங்கன் எங்கே பிறந்தார் ?

_______________________________

ii. லிங்கனுடைய பொழுது போக்கு யாது ?

_______________________________

iii. லிங்கனால் ஏன் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை?

_______________________________

iV. பிற்காலத்தில் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாவ தற்குக் காரணமாக அமைந்தது யாது ?

_______________________________

V. பந்தியில் இடம்பெற்றுள்ள படர்க்கை ஒருமை ஆண் பால் சொல் ஒன்று தருக.

_______________________________

(02) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்தச் சொல்லை எழுதுக.

1. வயல் : _______________________

2. அடக்கம் : _______________________

(03) பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத் தும் கருத்தை எழுதுக .

1. விட்டுக் கொடுத்தல்

_______________________________

2. கண்ணாயிருத்தல்

_______________________________

(04) பின்வரும் பழமொழிகளுக்குரிய கருத்தை எழுதுக.

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

_______________________________

2. குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது


_______________________________

(05) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்க ளில் நிறுத்தக் குறிகளை இடுக.

i. ஆதிகாலத்தில் தரை மார்க்கமாகச் செல்வதற்கு மாட்டு வண்டி குதிரை வண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தி னர்

ii. எண் எழுத்து இகழேல் என்றார் ஔவைப்பாட்டி

(06) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.



i. This is a _______________________

ii. வகுப்பறை என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

_______________________________

(07) **பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. தயவுசெய்து உங்களுடைய புத்தகத்தைத் திறக்கவும் .

______________________________

✱ **8, 9 ஆகிய வினாக்களில் உள்ள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(08) Please wash your hands

______________________________

(09) ஆயு போவன்

______________________________

✱ **10 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

(10) பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ.

1. காட்டு மல்லிகை 2. நந்தியாவட்டை
3. மல்லிகை 4. வாடா மல்லிகை

(11) பின்வரும் வித்துக்களினிடையே நீரில் மிதக்கும் வித்து.

1. பயறு 2. கௌப்பி
3. உழுந்து 4. தேங்காய்

12) வித்து மூலம் இனம் பெருக்கும் தாவரம் அல்லாதது.

1. வெண்டி 2. வேம்பு
3. ஈரப்பலா 4. பாகல்

13) ஒட்டுண்ணித் தாவரமாக அமைவது.

1. மல்லிகை 2. வெற்றிலை
3. ஐதரில்லா 4. பனங்கற்றாளை

14) வித்துக்களைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கம்.

1. கொலாஜ் 2. அல்பனா
3. ஒட்டுச்சித்திரம் 4. நவீன சித்திரம்

15) பின்வருவனவற்றில் இரும்புச்சத்து அதிகமுள்ளது.

1. கரட் 2. பருப்பு
3. கீரை 4. மரவள்ளி

16) இதய வடிவ இலைகளைக் கொண்ட தாவரம்.

1. ஆமணக்கு 2. திப்பிலி
3. வெண்டி 4. பப்பாசி

17) இலங்கையிலுள்ள பெரிய நீர் வீழ்ச்சியாக அமைவது.

1. அபர்டீன் 2. தியலும
3. பம்பரகந்த 4. லக்சபான


18) பண்டுகாபயனால் கட்டப்பட்ட குளம் .

1. மின்னேரியா 2. கலாவாவி
3. அபயவாவி 4. திஸ்ஸவாவி

19) மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிக்க முன்பாகக் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்.

1. மருந்து உற்பத்தி செய்த நிறுவனம்
2. மருந்தின் விலை
3. ஒரு வேளைக்கு எடுக்க வேண்டிய அளவு
4. மருந்தில் அடங்குபவை

20) மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்கை எதனைக் குறிப்பிடுகின்றது?



1. முன்னால்
2. வீதி எதிரே மூடப்பட்டுள்ளது
3. ஒடுக்கமான பாலம் முன்னால்
4. சிறுவர்கள் முன்னால்



21) உருவிலுள்ள பொலிஸ்காரரின் சைகை எதனைக் குறிப்பிடுகின்றது ?



1. முன்னாலிருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிறுத்துக.
2. பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துக
3. முன்னே வருக.
4. நிறுத்துக.

22) குறித்த நிறங்கள் இடாமல் தரப்பட்டுள்ள பின்வரும் இலச்சினைகளிடையே இலங்கையின் மின்சார சபை இலச்சினையைத் தெரிந்தெடுக்குக.

1. 

2. 
3. 
4. 

(23) சர்வதேச சிறந்த தரத்தினை உறுதிப்படுத்தும் தரச்சான்று

1. SLS 2. SBN
3. ISO 4. SLDA

(24) குப்பை கூழங்களை உக்கச் செய்யும் பிராணி

1. தேனீ 2. மண்புழு
3. காகம் 4. கறையான்

(25) சூரிய கிரகணம் ஆரம்பிக்கும் போது

1. சூரியன் படிப்படியாக கருமையடைகின்றது.
2. சூரியன் ஒரே தடவையில் கருமையடைகின்றது.
3. சூரியன் பிரகாசம் படிப்படியாக அதிகரிக்கின்றது.
4. புவி முழுவதும் முழுமையாக இருட்டாகின்றது.



# அழகு...,

உடல் நலம்...,

குழந்தை வளர்ப்பு...,

சாதனை மகளிர்...,

ஆலோசனை...,

உளவியல்...,

## சிநேகிதியே

### தையல் பயிற்சி

### முன் பக்கம் பொக்ஸ் பிலிட் டையிட் பாவாடை

தேவையான அளவு

உயரம் - 35

இடுப்பின் சுற்றளவு - 24

சீட் உயரம் - 8

சீட் சுற்றளவு - 34

உயரம் - 35

இடுப்பின் சுற்றளவு - 24/4


= 6

$6 + \frac{1}{2} + 1\frac{1}{2} + 8$

சீட் சுற்றளவு = 34/4

$= 8\frac{1}{2}$

$8\frac{1}{2} + \frac{1}{2} + \frac{1}{4} + 9\frac{1}{2}$





தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :- திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

# அக அழகைக் காட்டும் கண்ணாடி நம் நகங்கள்





தனு ரசாக்

எமது சருமத்தில் நாம் மிகவும் கவனிக்க வேண்டிய எமது கை, கால் நக பராமரிப்புகள் பற்றி பார்த்திருக்கின்றோம். அழகு என்ற விடயத்தை நாம் பொதுவாக எடுத்து நோக்குவோமாயின் அதில் அக அழகை வெளிப்படுத்தும் கண்ணாடி நகங்கள் தான்.

உடலின் ஆரோக்கியத்தை நகத்தினைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். அந்த நகத்தை சரியாக பராமரிப்பது ஒவ்வொருவரின் கடமை ஆகும். சிலர் தமது கை, கால் நகங்களை அழகுபடுத்திக் கொள்வதற்காக இதற்கென்றே நேரத்தை ஒதுக்கி அழகு நிலையங்களுக்கு செல்கின்றனர். இது தவறான ஒருவிடயமல்ல. இவ்வாறு தான் ஒவ்வொரு பெண்ணும் தன்னை எந்தவயது வித்தியாசமின்றியும் தம் அழகில் அக்கறை கொண்டு பராமரித்தல் வேண்டும். இன்றிருக்கும் அதிக வேலைப்பளு காரணமாக சில பெண்களுக்கு இதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியாமல் அவஸ்தைப்படுவதையும் நாம் அறிவோம். இதனைத் தவிர்க்க வீட்டிலேயே செலவில்லாமல் நகங்களை சீராக்கலாம் என்கின்றார் நம் அழகுக்கலை நிபுணரான தனு ரசாக்.

நகங்களை சீர்மையாக வளர்த்து தங்களது கை, கால் விரல்களின் அமைப்புக்கேற்ற விதத்தில் வெட்டிக்கொள்ள வேண்டும். சிலருக்கு நகங்கள் வளர்ந்திருப்பது கால்களுக்கு மேலும் அழகைக் கொடுக்கும். ஆயின் சிலருக்கு அது பொருந்தாது. ஆகவே, தங்களது கால் கை அமைப்பிற்கு ஏற்ப இவற்றை சீர்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கை, கால் நகங்களில் நெயில் பொலிஷ் போட்டிருந்தால் அவற்றை ரிமூவர் பயன்படுத்தி மென்மையாக எடுக்கவும்.

அகலமான பாத்திரத்தில் வெதுவெதுப்பான நீரை நிரப்பி அதில் சிறிதளவு உப்பு, சோப் போட்டு நுரை வருமாறு கலக்கவும். அதில், கால்களையும், கைகளையும் நகங்கள் நனையுமாறு ஊறவைக்கவும். 10 நிமிடங்கள் கழித்து உப்பைக் கொண்டு அழுக்கு, இறந்த செல்கள் இருந்தால் போகுமாறு நன்கு உரசி கழுவவேண்டும்.

இதனால் இறந்த செல்கள் இருந்தால் முற்றிலும் உதிர்ந்து விடும். வெடிப்புகள் இருந்தாலும் குணமாகும். கை, கால்களில் சிறிதளவு சோப் போட்டு தேய்த்து குளிர்ந்த நீரில் நன்கு கழுவவேண்டும். இதனால் கை, கால் சருமங்களுக்கு ஒரு புத்துணர்ச்சி கிட்டும். தற்போது கைகளுக்கென்றே மசாஜ் செய்துகொள்வதற்கென்றே சில எண்ணெய்கள் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. இவற்றை சரியான தரம் வாய்ந்த எண்ணெய்களை வாங்கி முறையாக கை, கால்களுக்கு பூசினால் கை, கால்கள் மென்மையாகும்.

இவ்வாறு வாரம் இருமுறை செய்து வந்தாலே உங்கள் கை, கால்கள் பார்ப்பதற்கு பளபளப்பாகவும், அழகாகவும் தோற்றமளிக்கும்.

எஸ்.பிரியதர்ஷினி

# உடலை அழகாக்கும் டயட் டிப்ஸ்!



உடல் அமைப்பை கட்டுக் கோப்பாக வைத்திருக்க டயட்டில் இருப்பவர்கள் இன்று நிறையப்பேர் உள்ளனர். உணவைக் குறைத்து உடலை அழகாக்கப் போகிறோம் என்ற தாரக மந்திரத்தை பின்பற்றும் இவர்களில் பலர் பட்டினி கிடந்து உடல் இளைத்துப்போவதும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் ஆரோக்கியமான டயட் முறையை பின்பற்ற சில டிப்ஸ்:-

* தினமும் ஏதாவது ஒரு பழ ஜூஸ் குடியுங்கள். நீங்கள் குடிக்கும் பழ ஜூஸ் அப்போது தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதில் சீனி மற்றும் ஐஸ் சேர்க்காமல் சாப்பிடவும். சீனி சேர்த்தால் பழத்தின் முழுச் சத்தும் குறைந்து விடும்.
* எண்ணெய் அதிகம் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள். முடிந்தவரை காய்கறிகளை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளவும்.
* வேக வைத்த பயறு வகைகள், தானியங்கள், காய்கறிகள் உங்கள் உணவு பட்டியலில் முதலிடம் பிடிக்கட்டும்.
* இட்லி, இடியப்பம், அப்பம், பிட்டு போன்ற வேகவைத்த உணவுகளை அளவோடு சாப்பிடவும்.
* உண்ணும் உணவில் அதிக காரம் இல்லாமல் பார்த்துக் கொள் ளுங்கள். காரத்திற்காக சேர்க்கும் பச்சை மிளகாய்க்கு பதிலாக மிளகு சேர்ப்பது நல்லது.
* மாலை வேளைகளில் கண்ட கண்ட நொறுக்கு தீனிகளை வாயில் போட்டு நொறுக்காமல், வேக வைத்த தானிய வகைகள், சுண்டல் ஆகியவற்றை சாப்பிடவும்.
* அவ்வப்போது, பல வகை பழங்களை கொண்டு செய்யப்பட்ட சலட் சாப்பிடுவதும் நல்லதுதான்.
* புளிப்பான உணவுகளை முடிந்தவரை குறைத்துக்கொள்ளவும். அதுக்கு பதில் தக்காளியை சேர்த்துக்கொள்ளுங்கள்.

பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத வீட்டுத் தாதிமார்கள் தேவை (கொழும்பு)

தகைமை :
ஆண்டு 10 க்கு மேல் கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.

உணவு, தங்குமிட வசதிகளுடன்
மாத வருமானம்
ரூ.10,000 - 18,000/-

தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

## பாடல்



படம் : கேடி பில்லா கில்லாடி ரங்கா
இசை: யுவன் ஷங்கர் ராஜா
பாடியவர்: விஜய் ஜேசுதாஸ்
பாடல்வரிகள் : நா.முத்துக்குமார்

தெய்வங்கள் எல்லாம்
தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே
தாலாட்டு பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே
தகப்பனின் கண்ணீரை
கண்டோர் இல்லை
தந்தை சொல் மிக்க
மந்திரம் இல்லை
என் உயிரணுவில் வரம்
உன் உயிரல்லவா
மண்ணில் வந்த நான்
உன் நகலல்லவா
காயங்கள் கண்ட
பின்பே உன்னை கண்டேன்......!

தெய்வங்கள் எல்லாம்
தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே
தாலாட்டு பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே

கண்டிப்பிலும் தண்டிப்பிலும்
கொதித்திடும் உன்முகம்
காய்ச்சல் வந்து படுக்கையில்
துடிப்பதும் உன்முகம்
அம்பாரியாய் ஏற்றிக் கொண்டு
அன்று சென்ற ஊர்வலம்
தகப்பனின் அணைப்பிலே
கிடந்ததும் ஓர் சுகம்

வளர்ந்ததுமே யாவரும்
தீ....வாய்... போகிறோம்
தந்தை அவனின் பாசத்தை
எங்கே காண்கிறோம்
நமக்கெனவே வந்த நண்பன் தந்தை

தெய்வங்கள் எல்லாம்
தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே
தாலாட்டு பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே

## கெஸ்ட் ரோலில் நட்சத்திர தம்பதி



கோவா படத்தில், முதன் முறையாக கெஸ்ட் ரோலில் நடித்த பிரசன்னா, தொடர்ந்து நேற்று, இன்று, ஜே ஜே என்னும் நண்பனின் வாழ்க்கை மற்றும் பிரியாணி ஆகிய படங்களிலும், கெஸ்ட் ரோலில் நடிக்கிறார். இதில் பிரியாணி மற்றும் ஜே ஜே என்னும் நண்பனின் வாழ்க்கை ஆகிய படங்களில், பிரசன்னா - சினேகா இருவரும் இணைந்தே கெஸ்ட் ரோலில் நடித்துள்ளனர்.

## பாடி நடிக்கும் வடிவேலு!



இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சினிமாவில் தலைகாட்டுகிறார் வடிவேலு. அரசியலில் சிக்கிக் கரையொதுங்கிய வடிவேலு சினிமாவை விட்டு விலக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டார். இப்போது அவரது வனவாசம் ஒருவழியாக முடிவுக்கு வந்துவிட்டது. இரண்டு ஆண்டுகளாக சினிமா வாய்ப்பு இன்றி தவித்த வடிவேலு. இப்போது யுவராஜ் இயக்கும் கஜ புஜ கஜ தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும் என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இதில் வடிவேலு இரட்டை வேடத்தில் நடிக்கிறார். இமான் இசையமைக்கிறார். ஏ.ஜி.எஸ்., நிறுவனம் தயாரிக்கிறது.

படத்தில் வடிவேலு பாடல் ஒன்றையும் பாடியிருக்கிறார். இந்த தகவலை இசையமைப்பாளர் இமானே தெரிவித்துள்ளார். இந்தப் படத்துடன் மேலும் 3 படங்களில் நடிக்க வடிவேலு தயாராகி வருகிறார். இவற்றில் ஒன்று கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படமாகும். அத்தோடு இயக்குநர் சுந்தர்.சியுடன் இணைந்து ஒரு படம் நடிக்கும் திட்டத்திலும் உள்ளாராம் வடிவேலு.



## சந்தானத்தின் ஏஞ்சல் ஹன்சிகா



### கிசுகிசுவை

ஆர்யா மாதிரியே ஹன்சிகாவும் கிசு கிசுக்களைக் கண்டு கலங்குவதில்லை. மாறாக, தன்னைப் பற்றி பத்திரிகைகளில் வெளியாகும் கிசுகிசுக்களை, ஆள் வைத்து படித்து, தெரிந்து கொள்கிறார் ஹன்சிகா. சில முக்கிய நடிகர்களுடன் தன்னை இணைத்து வெளியாகியிருக்கும் செய்திகளை, உடனே சம்பந்தப்பட்ட நடிகர்களுக்கும் தெரியப்படுத்தி, அதை மகிழ்ச்சியாக பகிர்ந்து கொண்டு வருகிறார்.

ஹன்சிகாவை கோலிவுட்டில் சின்ன குஷ்பு என்று அழைக்கிறார்கள். ஹன்சிகா நடிக்கும் பெரும்பாலான படங்களில் சந்தானமும் நடித்து வருகிறார். படப்பிடிப்பில் சந்தானம் ஹன்சிகாவை கலாய்ப்பாராம். சேட்டை படப்பிடிப்பின்போது அவர் ஆர்யாவுடன் சேர்ந்து கொண்டு ஹன்சிகாவை செமையாக கலாய்த்துள்ளார். என்னடா இது இப்படி கலாய்க்கிறார்கள் என்று ஹன்சிகா நொந்துவிட்டாராம். இந்நிலையில் சுந்தர் சி. படமான 'தீயா வேலை செய்யணும் குமாரு' படப்பிடிப்பில் சந்தானத்தை பார்த்து ஹன்சிகாவே ஆச்சரியப்பட்டுள்ளார். காரணம் மனிதர் ஹன்சிகாவை கலாய்க்கவில்லையாம். மாறாக புகழ்ந்துள்ளார். ஊரெல்லாம் ஹன்சிகாவை சின்ன குஷ்பு என்று அழைக்கிறது. அப்படி இருக்கையில் அவர் என்னவென்றால் ஹன்சிகா தன் பார்வைக்கு ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜூலி போன்று இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## சினிமா

## கர்ப்பிணி வேடத்தில் நயன்தாரா!



வித்யாபாலன் நடித்த படம் கஹானி. காணாமல் போன கணவனைத் தேடி அலையும், கர்ப்பிணி கதாபாத்திரத்தில் அவர் நடித்திருந்தார். தற்போது, அப்படம் தமிழ், தெலுங்கில் ரீ - மேக் ஆகிறது. இதில் நடிக்க, சில நடிகைகள் போட்டி போட்ட போதும், நயன்தாராவை தேடி வந்து, 'புக்' செய்துள்ளனர். இதனால், உற்சாகமடைந்துள்ள நயன், வித்யா பாலனை மிஞ்சும் நடிப்பை வெளிப்படுத்தி விட வேண்டுமென்று, கர்ப்பிணி கெட்டப்பில் ரிகர்சலை துவங்கியுள்ளார்.



சிறுத்தை
நடித்த

# ஆன்மீகத்துக்கு மாறும் சிம்பு



நடிகர் சிம்பு ஆன்மீகத்துக்கு மாறுகிறார். ஏற்கனவே காதல் சர்ச்சைகளில் பரபரப்பாக பேசப்பட்டார். தனுசுடன் மோதல், சக நடிகர்கள் பற்றி தன் படங்களில் வசனம் வைத்து கேலி செய்தல் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டார். ஆனால் சமீப காலங்களில் சிம்புவிடம் நிறைய மாற்றங்கள் தெரிவதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். படங்களில் கூட இமேஜ் பார்க்காமல் நடிக்கிறார். பேச்சிலும் மென்மையை கடைப்பிடிக்கிறார். அத்துடன் ஆன்மீக செயல்பாடுகளிலும் ஈடுபடத் தொடங்கி உள்ளார்.

சிம்புவுக்கு பிடித்த உணவாக இருப்பது அசைவம். அந்த உணவு வகைகளை தற்போது சாப்பிடுவதை தவிர்க்கிறார். நட்சத்திர ஓட்டல்களில் நடக்கும் விருந்துகள் விழாக்களில் பங்கேற்பதையும் நிறுத்தி உள்ளார். நண்பர்களுடன் சுற்றுவதையும் குறைத்துக் கொண்டார். அடிக்கடி தனியாக கண்களை மூடி பத்மாசனத்தில் உட்கார்ந்து தியானம் செய்கிறார். சிம்பு தற்போது வாலு, வேட்டை மன்னன் என இரு படங்களில் நடிக்கிறார்.


## விரைவில் தமிழ் புதுப்படம் நடிப்பேன் - ஸ்ருதி

தமிழில் நடிப்பதை விட்டுவிட்டு நான் தெலுங்கு, இந்தியில் மட்டுமே கவனம் செலுத்துவதாக வரும் செய்திகள் உண்மையல்ல என்று கூறியுள்ளர் நடிகை ஸ்ருதிஹாசன். தமிழில் ஏழாம் அறிவு மற்றும் 3 படங்களில் நடித்துள்ளார் ஸ்ருதி. இரண்டுமே ரசிகர்களை ஏமாற்றிவிட்டன. அதன் பிறகு ஸ்ருதிஹாஸன் தமிழில் எந்தப் படத்தையும் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் நடித்ததெல்லாம் தெலுங்கு மற்றும் இந்தியில்தான். தமிழில் அவர் யாரிடமும் கதை கேட்கக் கூட மறுப்பதாக கூறப்பட்டது. எனவே அவர் இனி தமிழில் நடிக்கமாட்டார் என செய்தி பரவியது. இதுபற்றி அவரிடம் கேட்டபோது, நான் ...ழை புறக்கணிக்கப் போகிறேன். அப்படிச் சொல்வதே முட்டாள்த் ...டிகர்கள்தான் குறிப்பிட்ட மொழியோடு நின்று போவார்கள். நடிகைகளுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. இப்போதைக்கு ...கு. இந்தியில் பிசியாக உள்ளேன். தமிழில் நான் விரும்புகிற மாதிரி கதை அமைந்தால் நடிப்பேன் என்றார்.



## விஷால் இமயமலை விசிட்!

ரஜினி ஒவ்வொரு படத்தில் நடித்து முடித்ததும், இமயமலைக்கு சென்று வருவது போல், தற்போது விஷாலும் சென்று வருகிறார். 'இது ரஜினியை பின்பற்றும் முயற்சியா?' என்று அவரைக் கேட்டால், நிச்சயமாக இல்லை என்கிறார். 'ஒரு முறை எதேச்சையாக இமயமலைக்கு சென்றபோது, அங்குள்ள அழகும், அமைதியும் என் மனதை கவர்ந்தது. அதனாலேயே அடிக்கடி அங்கு செல்கிறேன்...' என்கிறார் விஷால்.




தனுஷின் சமீபகாலப் படங்கள் தோல்விகளை சந்தித்து வருவதால், மரியான் படத்தை பெரிய அளவில் எதிர்பார்க்கிறார். ஏ.ஆர்.ரகுமான், பரத்பாலா, பூ பார்வதி கூட்டணியில் இணைந்திருப்பவர், இந்தப் படத்துக்காக நீச்சலே தெரியாமல் தண்ணீருக்குள் நடுக்கடலுக்குள் சென்று நடித்திருக்கிறார். அதோடு படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி நபீபியாவில் படமானபோது அங்குள்ள பாலைவனத்தில் பயங்கர வெயிலில் செருப்புக் கூட அணியாமல் நடித்தாராம். அத்தோடு ஒரு காட்சியில் சிறுத்தையுடன் ஒருநாள் முழுக்க நடித்தாராம் தனுஷ். அப்போதெல்லாம் இவ்வளவு ரிஸ்க் எடுத்து நடிக்க வேண்டுமா என்று பயந்தாராம். ஆனால் இப்போது படம் நன்றாக வந்திருப்பதைப்பார்க்கும்போது பட்ட கஷ்டத்துக்கு நல்ல பலன் கிடைத்து விட்டது என்று சந்தோசத்தை வெளிப்படுத்துகிறார் தனுஷ். மேலும், ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் படத்தில் நடிக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. அது இப்போது நிறைவேறியிருக்கிறது...

## பாடல்



படம் : ரோசாப்பூ ரவிக்கைக்காரி
இசை : இளையராஜா
பாடியவர்: SP பாலசுப்ரமணியம்
பாடல்வரிகள் : புதுமைப்பித்தன்

உச்சி வகுந்தெடுத்து
பிச்சிப் பூ வச்ச கிளி
பச்ச மலப் பக்கத்துல
மேயுதுன்னு சொன்னாங்க
மேயுதுன்னு சொன்னதுல
ஞாயமென்ன கண்ணாத்தா

(உச்சி வகுந்தெடுத்து)

ஏ ஆரீரரோ ஆரீராரோ
ஆரீராரீராரீ ஆரீராரோ
ஆரீராரோ ஆரீராரோ
ஆரீராரோ ஆரீராரோ

பட்டியில மாடு கட்டி
பாலக் கறந்து வச்சா
பால் திரிஞ்சி
போனதுன்னு சொன்னாங்க
சொன்னவங்க வார்த்தையிலே
சுத்தமில்ல அடி சின்னக்
கண்ணு நானும்
அத ஒத்துக்கல

(உச்சி வகுந்தெடுத்து)

வட்டுக் கருப்பட்டியே
வாசமுள்ள ரோசாவ
கட்டெறும்பு மொய்ச்சுதுன்னு
சொன்னாங்க
கட்டுக் கத அத்தனயும் கட்டுக் கத
அத சத்தியமா நம்ப மனம் ஒத்துக்கல

(உச்சி வகுந்தெடுத்து)

பொங்கலுக்குச் செங்கரும்பு
பூவான பூங்கரும்பு
செங்கரையான் தின்னதுன்னு
சொன்னாங்க
செங்கரையான் தின்னுருக்க
ஞாயமில்ல

# தண்டனை



ஒரு நாள் சக்கரவர்த்தி அக்பர் அரசவைக்கு வந்தார். அவரது முகம் சிறிது வாட்டமாகத் தென்பட்டது. அக்பர் தனது இருக்கையில் அமர்ந்து, அவர் மிகவும் கோபமாக இருப்பதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு அவையினரைக் கண்டார். அனைவரும் பயத்தில் நடுங்கி இவருக்கு என்ன ஆயிற்று என எண்ணினர்.

"பாதுஷாவே! தங்கள் முகம் வாடியிருப்பதன் காரணம் என்னவோ?" அக்பரின் அரசவையில் உள்ள நவரத்தினங்களுள் ஒருவரான ராஜா தோடர்மால் கேட்டார்.

"நான் அவைக்கு வந்துகொண்டிருக்கும்போது யாரோ ஒருவன் எனது மீசையைப் பிடித்து இழுத்தான். அவன் என் முகத்தில் துப்பினான். கூறுங்கள் அவனை எப்படி தண்டிப்பது?" அக்பர் கேட்டார்.

" அவனை உடனே கைது செய்ய வேண்டும்" எனக் கூறினார் ஒருவர்.

" அவனுக்கு நன்கு சவுக்கடி கொடுத்து அவனது தலையைத் துண்டிக்க வேண்டும்" மற்றொருவர் கூறினார்.

"மன்னரின் முகத்தில் துப்பி அவரது மீசையைப் பிடித்திழுத்த அவனை இந்நாட்டிலிருந்தே வெளியேற்ற வேண்டும்" என இன்னொருவர் கூறினார்.

அவனை எரியும் நெருப்புத் துண்டங்களின் மேல் நடக்க வைக்க வேண்டும்." வேறொருவர் கூறினார்.

இந்த உற்சாகமான உரையாடலின் போது பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார். அவையினர் பேசுகையில் அவர் புன்முறுவல் பூத்தவாறு இருந்ததை அக்பர் கண்டார்.

"சரி பீர்பால், என்னிடம் முறைகேடாக நடந்து கொண்டவனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் எனக் கூறு" என்று மன்னர் கேட்டார்.

"பாதுஷாவே! நீங்கள் அவனை அணைத்து தங்களது மீசையைப் பிடித்திழுத்த கைகளில் முத்தமிட்டு, உங்கள் முகத்தில் துப்பிய அவ்வாயில் இனிப்பினை இடவேண்டும்!" பீர்பால் புன்னகை பூத்தவாறு கூறினார்.

இதைக்கேட்ட அக்பரின் அவையினர், "என்ன அர்த்தமற்ற முறையில் அவர் பேசுகிறார்" என குரலெழுப்பினர்.

" ஆம், பாதுஷாவே! பீர்பால் எப்பொழுதும் நாங்கள் என்ன கூறுகிறோமோ அதற்கு எதிராகவே கூறுவார். அவர் சொல்வதை தாங்கள் ஏற்கக்கூடாது" என ஒருவர் வாதாடினார்.

ஆனால், அக்பர் அமைதியாகக் காணப்பட்டார்.

"பீர்பால், உன்னுடைய பதில் புதுமையாக உள்ளது. ஏன் அவ்வாறு கூறினாய் என விளக்குவாயா?" எனக் கேட்டார்.

பீர்பால் சிரித்தவாறு பதிலளித்தார். "பாதுஷாவே! உங்களது மீசையைப் பிடித்திழுக்கவும் உங்கள் முகத்தில் உமிழவும், குழந்தை இளவரசரைத் தவிர யாருக்கு தைரியமுள்ளது? அதனால் அவரை நான் கூறுயதைத் தவிர வேறு எவ்வாறு தண்டிக்க முடியும்?" என பீர்பால் விளக்கமளித்தார்.

"எப்பொழுதும் போல நீ கூறியது சரியே பீர்பால்!" என அக்பர் வியந்து கூறினார்.

மன்னர் அவையினரைப் பார்த்து, பீர்பால் கூறுயதுதான் உண்மையாக நிகழ்ந்தது என்றும், அச்செயலைச் செய்தது குழந்தை இளவரசரென்றும் கூறினார். அவையில் இருந்த அனைவரும் தாங்கள் கூர்ந்து யோசிக்காமல் நடந்துகொண்டதை நினைத்து வெட்கப்பட்டனர்.

## இந்த வார குட்டீஸ்



பெயர்: ருவிக்ஷன்
பெற்றோர்: விக்னேஷ்வரன், மதனிக்கா.
இடம்: மட்டக்குளி.



பெயர்: கோபிநாத்
பெற்றோர்: சுகதேந்திர ராஜன், கிருஷ்ணதேவி
இடம்: ஹாலிஎல.

## செக்கோயா மரம்!

மிகச் சிறிய விதை ஒன்றில்தான் பூமியிலேயே மிகப் பெரிய மரம் வளர்ந்திருக்கின்றது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? கலிஃபோர்னியாவில் காணப்படும் செக்கோயா என்ற மரம் நிலத்திலிருந்து 100 மீற்றர் உயரத்திற்கும் அதிகமாக வளர்ந்து நிற்கும். தரையிலிருந்து ஒன்றரை மீற்றர் உயரத்தில் இந்த மரத்தின் அடிப்பாகத்தின் விட்டம் 11 மீற்றர் கூட இருக்குமாம்.

இந்த ஒரு மரத்தை வைத்து ஆறு அறைகள் கொண்ட ஐம்பது வீடுகளைக் கட்ட முடியுமாம். இதன் மரப்பட்டை மட்டும் 60 செ.மீ. இதிலுள்ள டேனின் என்ற பொருள் பூச்சிகளை அண்டவிடாமல் செய்கின்றது. இம்மரத்தின் வேர்கள் 3 அல்லது 4 ஏக்கர் அளவுக்கு பரவியிருக்குமாம்.

ஒரு செக்கோயா மரம் 3000 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

இம்மரத்தின் விதைகள் ஒவ்வொன்றும் ஒரு குண்டூசியின் தலை அளவில்தான் இருக்கும். இந்த விதைகளுக்கு சிறிய இறக்கைகள் கூட உண்டு.

## விஷத் தவளை!



மத்திய மற்றும் தென் அமெரிக்க கண்டத்தில் பொய்சன் டார்ட் ஃப்ராக் எனும் ஒருவித விஷத் தவளை காணப்படுகிறது. இந்தத் தவளையின் தோல் மீது விஷத்தன்மை உள்ளது. செவ்விந்தியர்கள் இந்தத் தவளையைக் கொன்று அதைத் தங்கள் அம்புகளின் நுனியில் தேய்த்து விலங்குகளை வேட்டையாட பயன்படுத்துகிறார்கள். இதனால் இந்த அம்பு பாய்ந்த விலங்கு பாதிக்கப்படும். அதன் நரம்பு மண்டலம் செயலிழந்து விடும். சில மணி நேரங்களுக்கு விலங்குகள் முடங்கிக் கிடக்கும்.

இந்தத் தவளைகள் தங்களுக்கென்று ஒரு எல்லையை வகுத்துக் கொண்டு அதற்குள் வாழ்கின்றன. ஒருபோதும் இந்த எல்லையைத் தாண்டுவது இல்லை.

## அமைதிப் புறா!

இரண்டாம் உலகப் போர் முடிவை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரபல ஓவியர் பிக்காஸோ, பிரான்ஸ் நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். இந்தக் கட்சி 1950 ஆம் ஆண்டு நடத்திய அமைதி மாநாட்டுக்காக பிக்காஸோ ஒரு புறா ஓவியம் வரைந்தார். அதுதான் இன்றுவரை உலகம் முழுவதும் அமைதிச் சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது.

26) இயற்கை அனர்த்தங்களாக அமையாதது.

1. சுனாமி 2. மின்னல் தாக்கம்
3. வாகன விபத்து 4. வெள்ளப்பெருக்கு

27) கஞ்சற் கருவிகளில் ஒன்று

1. தம்புரா 2. சங்கு
3. கொம்பு 4. சல்லாரி

28) இக் குறியீடு குறிப்பது



1. உடையக்கூடியது
2. மீள்சுழற்சி
3. கவனமாகக் கையாளுங்கள்
4. மின்னல் தாக்கம்

29) தாவரங்களில் இரவைக் களிக்கும் பிராணிகளில் ஒன்று

1. நாய் 2. பூனை
3. தேவாங்கு 4. எலி

30) தாவர இலைகளில் கூடு கட்டும் பிராணி:

1. கொக்கு 2. செவ்வெறும்பு
3. மைனா 4. தேனீ

31) காலாவதியாகிய தகரத்தில் அடைத்த உணவை உண்பதால் ஏற்படும் நோயாக அமைவது:

1. காய்ச்சல் 2. இருமல்
3. வயிற்றுவலி 4. மலேரியா

32) சிறிய பொருளொன்றை பெருப்பித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் எளிய உபகரணம்.

1. ஊசித்துளைக் கமரா 2. கைவில்லை
3. தொலைக்காட்டி 4. திசைகாட்டி

33) நிலைக்குத்தாக சுவர் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்குப் பயன் படுத்தப்படும் உபகரணம்:

1. தூக்குக்குண்டு 2. மூலைமட்டம்
3. சாந்தகப்பை 4. மட்டக்கம்பு

34) சிங்கள அகராதியின் ஆசிரியர்:

1. ஆனந்த சமரக்கோன் 2. மு. நல்லதம்பிப் புலவர்
3. டி.பி. ஜயதிலக்க 4. ஆதர் சீ. கிளார்க்


35) தகரப் பேணிகளின் மூடிகளை வெட்டுவதற்குப் பயன்படுத் தப்படும் உபகரணம்

1. குறடு 2. கத்தி
3. போத்தல் மூடி திறக்கும் உபகரணம் 4. இடுக்கி

36) அரச இலட்சினையில் நெற்கதிர் உணர்த்துவது

1. தார்மீகம் 2. நிலைத்திருத்தல்
3. தன்னிறைவு 4. வீரம்

✱ **கீழேயுள்ள இலங்கைப்படத்தின் உதவியுடன் கேட் கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**




37) வடமாகாணத்தின் தலைநகரைக் குறிக்கும் ஆங்கில எழுத்து:

1. A 2. B
3. C 4.D

(38) இலங்கையின் இயற்கைத் துறைமுகத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து.

1. C 2. B
3. A 4.D

39) இலங்கையின் தலை நகரத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

1. A 2. B 3. C 4.D

40) நான்கு பாடசாலைகளிலிருந்து விளையாட்டுப் போட்டி யொன்றில் பங்கு பற்றிய மாணவர்களின் எண்ணிக்கையை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

| பாடசாலை | மாணவர் தொகை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| பாரதி | 60 | 50 |
| கம்பர் | 55 | 40 |
| வள்ளுவர் | 45 | 25 |
| சரஸ்வதி | 30 | 15 |

1) வள்ளுவர் வித்தியாலயத்திலிருந்து பங்கு பற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

______________________________

2) இப் போட்டியில் கலந்து கொண்ட ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

______________________________

3) கம்பர் வித்தியாலயத்திலிருந்து வருகை தந்த ஆண் பிள்ளை களின் எண்ணிக்கைக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக் கைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் யாது?


______________________________

4) அதிகமான பிள்ளைகள் எப் பாடசாலையில் இருந்து பங்கு பற்றினர் ?


______________________________

5) விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்ட பெண் பிள்ளை களின் விபரங்களைக் காட்டும் நிரல் வரை படத்தை வரைக.

அந் நிரல்களை பொருத்தமாக நிழற்றுக.





41) போத்தல்கள் சில மூன்று அடைப்புக்களில் ஒரு குறித்த கோலத்திற்கு ஏற்ப அடுக்கப்பட்டுள்ளன. அக் கோலத்திற்கு ஏற்ப வெற்று அடைப்பினுள் போத்தல்களை வைக்க வேண்டிய முறைகளை வரைக.



42) போத்தலொன்று 1l 350ml நீரைக் கொள்ளும். இவ்வாறான ஐந்து போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவை மில்லிலீற்றரில் தருக.

---

43) ஒரே அளவு நீளமும் அகலமும் உடைய கடதாசி கீலங்கள் 7, உருவிலே காட்டியவாறு மட்டை ஒன்றில் ஒட்டப்பட்டுள்ளது. உருவில் குறுகிய பக்க நீளம் 4 cm எனில்.




1. அதன் கீழ்ப்பக்க நீளம் யாது ?

2. அதன் சுற்றளவு யாது ?

44) மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் செல்வதற்காக காலை 6.35க்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு 40 நிமிடங்களின் பின் பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது ?

---

45) 2Kg உருளைக்கிழங்கின் விலை 80.00 ரூபாவாகும். 1Kg 250g நிறை உள்ள உருளைக்கிழங்கு வாங்குவதற்கு எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

---

46) 525 சவர்க்காரக் கட்டிகளை ஐந்து பெட்டிகளில் சமனாக அடுக்கினால் ஒரு பெட்டியில் எத்தனை சவர்க்காரக் கட்டிகள் இருக்கும்?


---

47) பின்வரும் நிரையில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 0.25 | 0. 5 | 0.75 | |


................................

48) பின்வரும் உருவில் நிழற்றப்பட்ட பகுதிகளை முழு உருவின் பின்னமாக எழுதுக.



---

49) கீழே தரப்பட்டுள்ள தளவடிவங்கள் யாவற்றையும் பயன்படுத்தி அமைக்கத் தக்க முப்பரிமாணப் பொருளின் பெயரை எழுதுக.



---

50) பெருக்கல் " ✱ " குறியீட்டினாலும் வகுத்தல் " / " குறியீட்டினாலும் காட்டப்படுமெனின் 8 ✱ 7/ 2 இன் பெறுமானம் யாது?

---

51) ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 4 மாத்திரைகள் வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுப்பதற்கு 48 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம் மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானவை?

---

52) " தாவரங்கள் ஒரு வளம் " என்னும் தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களாவது இடம்பெறுவதுடன் அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலையும் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.

1. ________________

2. ________________

3. ________________

4. ________________

5. ________________

6. ________________

20) இக் குறியீட்டில் 10 ஆவது இடத்தில் இருக்கும் எண்ணின் குறியீடு யாது?

1. 


2. 

3. 

21) கலைமதி சனசமூக நிலையக் களியாட்ட நிகழ்வு 3 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. 2010ஆம் ஆண்டு அதன் 5ஆவது தடவையாகக் களியாட்ட நிகழ்வு நடைபெற்றது எனின், அந் நிகழ்வு முதலாவதாக நடைபெற்ற ஆண்டு யாது?

1. 1995
2. 1980
3. 2005

**★ 22ஆம், 23ஆம் வினாக்கள் பின்வரும் பயணப் பாதையின் வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டது. அதிலே PQRST என்பன நகரங்களைக் குறிப்பதாகும். அந்த நகரங்களுக்கிடையேயான தூரம் உருவில் தரப்பட்டுள்ளது.**




22) கரன் Q இலிருந்து R இனூடாக S என்னும் நகரத்தை அடைந்தான் எனின், அவன் பயணித்த தூரம் யாது ?

1. 935Km
2. 678 Km
3. 828 Km

23) Q இலிருந்து T ஐ அடைய குறைந்தளவு தூரம் கொண்ட பாதை எது?

1. QRST
2. RQST
3. QST

**★ 24ஆம், 25ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசையில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடிடுக.**

24) 1. கத்தரி, மிளகாய், தக்காளி, வெண்டி

2. சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம்


3. கால், கை, உடல், கண்

25) 1. நண்டு, இறால், கணவாய், மீன்

2. தபேலா, மிருதங்கம், உடுக்கு, பறை

3. கிறிக்கெட், விளையாட்டு, காற்பந்து, வலைப்பந்து

26) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு விவசாயி ஒருவன் தனது முக்கோண வடிவக் காணியைக் கதிகால்கள் இட்டு வேலி அமைத்தார். யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் 14 கதிகால்கள் காணப்பட்டது எனின், இவ் வேலிக்குப் பயன்படுத்திய கதிகால்கள் எத்தனை?



1. 39 கதிகால்கள்
2. 42 கதிகால்கள்
3. 45 கதிகால்கள்

27) பெப்ரவரி மாதம் 29 நாட்கள் கொண்ட நெட்டாண்டு ஆகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நெட்டாண்டு வரும். 1996 ஆம் ஆண்டு நெட்டாண்டானால் 29 நாட்கள் கொண்ட பெப்ரவரி மாதங்கள் வரும் ஆண்டுகள் எவை?

1. 2000 - 2009
2. 2012 - 2016
3. 2004 - 2010

28) இரண்டு மோட்டார் கார்கள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசைகளில் 75 மீற்றர் தூரம் சென்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 500m தூரம் சென்றன. தற்போது இரண்டு வண்டிகளுக்குமிடையேயான தூரம் எவ்வளவு?

1. 100 மீற்றர்
2. 250 மீற்றர்
3. 150 மீற்றர்

29) ஞாயிற்றுக் கிழமைகள் ஐந்தினைக் கொண்ட ஒரு ஜனவரி மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் திகதிகளைக் கூட்டினால் பெறக்கூடிய, ஆகக் கூடிய மொத்தத்தொகை.

1. 92
2. 85
3. 82

30) □ + ○ = 12

□ + □ + ○ + ○ + ○ = 28

மேற்தரப்பட்ட தரவின் படி ○ இன் பெறுமதி யாது ?

1. 4
2. 8
3. 5

★ பின்வரும் பாடலை வாசித்து 31ஆம், 32ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

> சுட்டெரிக்கும் தழலைப் போன்று
> அழித்தொழிக்கும் பொறாமையே
> கற்றொழுகி நீ நடந்தால்
> தலை வணங்கும் தரணியே


31) சுட்டெரிக்கும் தழலைப் போன்றது எது எனக் கூறப்படுகிறது?

1. கர்வம்
2. பொறாமை
3. கருணை

32) "தரணியே தலை வணங்கும் சக்தி படைத்தது" எது எனக் கவிஞர் கூறுகிறார்?

1. நடை
2. தொழில்
3. கல்வி

33) இவ் உருவில் காணப்படும் முக்கோணியின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?



1. 9
2. 14
3. 12

34) புள்ளிக் கோட்டில் வர வேண்டிய இலக்கம் யாது?

(2) → (4)

(1) → (2)

(......) → (12)


(3) → (6)

1. 4
2. 6
3. 8

35) ஒரு பண்ணையில் உள்ள மாடுகளினதும் தாராக்களினதும் எண்ணிக்கை 14ஆகும். அவைகளின் கால்களின் எண்ணிக்கை 36 ஆகும். பண்ணையிலுள்ள தாராக்களின் எண்ணிக்கை யாது?

1. 8
2. 11
3. 10


36)




உருவில் மைதானத்தில் வரையப்பட்டுள்ள ஓட்டச் சுவடு தரப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு 300 மீற்றர் ஆகும். x எனும் இடத்திலிருந்து ஓட ஆரம்பிக்கும் கண்ணன் நிமிடத்திற்கு 10 m வேகத்தில் சென்றான். அவன் ஒரு தடவை சுற்றி வந்து மீண்டும் x ஐ அடைய எடுக்கும் நேரம் எவ்வளவு ?


1. 20 நிமிடம்
2. 40 நிமிடம்
3. 30 நிமிடம்

37) பின்வரும் கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தைத் தெரிவு செய்க.




1. 9
2. 21
3. 5

38) இவ்வுருவைப் புள்ளிக் கோட்டின் வழியே ஒரு பகுதியை வெட்டி வேறாக்கிய பின் பெறப்படும் உட்புறத் தோற்றம்



1. வட்டம்
2. சதுரம்
3. செவ்வகம்

★ 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பின்வரும் அடைப்புக்குள் உள்ள விடயத்தை அவதானித்து விடை தருக.

| | | |
|---|---|---|
| மஞ்சல் நிறப்பழங்கள் | பூகோவா | |
| ஈரல் மீன் | இறுங்கு | கடலை |
| தவிடு நீக்கிய அரிசி | | |
| சாமை | பயறு | |

39) மேலுள்ள அட்டவணையில் காணப்படும் தானிய வகை எது?

______________________________

______________________________

40) உயிர்ச்சத்து A அதிகமுள்ள உணவு வகை எவை?

______________________________



# கோடிகளுக்கு மண்டியிட்டு கௌரவம் இழக்கும் கிரிக்கெட்



இலங்கை உட்பட உலக இளைஞர்கள் அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்துவிட்ட ஐ.பி.எல் (இந்தியன் பிரிமியர் லீக் I.P.L.) போட்டிகள் சூடு சுவாரஸ்யமாக நடந்தேறி வருகின்றன. கெய்ல், பொலார்ட் போன்றவர்களின் அதிரடியான ஆட்டத்தைக் கண்டு மெய்மறந்து போயிருந்தவர்களுக்கு முகம் சுளிக்கும் வகையில் சில சம்பவங்களும் ஐ.பி.எல் இல் அரங்கேறி உள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டிகள் இன்று பண முதலைகளின் கைகளில் சிக்கி கிரிக்கெட்டின் கௌரவம் இழக்கப்பட்டு வருவதாகவே விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல் என்றாலே இலட்சங்கள் இல்லை... இல்லை, கோடிகள் புரளும். சூதாட்ட விளையாட்டாக மாறிவருவதையே கடந்தகால பதிவுகளும் சொல்லி வைக்கின்றன. இலட்சங்கள், கோடிகள் என விளையாட்டு வீரர்கள் ஏலம் எடுக்கப்படுவதில் இருந்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடும் தரகர்கள் கையில் புரளும் கோடிகள் வரை இங்கு எல்லாமே பணம், பணம் தான்.

**தொடர்கதையாகிப் போன சூதாட்டம்**

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளில் அமித் யாதவ், சுசிந்திரா, ஸ்ரீவாஸ்தவ், அபினவ் பாலி, மோனி மிஸ்ரா போன்ற வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டதோடு, விளையாட்டுத் தடைக்கும் உட்பட்டிருந்தனர். இம்முறையும் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் ரோயல்ஸ் (டிராவிட்) அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந், அங்கிற் சவான், அஜித் சண்டிலா போன்றவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாகக் கூறியே இம்மூவரும் மும்பையில் அதிகாலை 2.30 மணியளவில் கைதுசெய்யப்பட்டு டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடைய இடைத்தரகர்கள் 6 பேரும் சி.ஐ.டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சூதாட்ட விவகாரத்தில் மேலும் முக்கிய வீரர்கள் இருப்பதாகவும் கூடிய விரைவில் அவர்களும் கைதுசெய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வானத்தைப் பார்த்தல், கைக்குட்டையை காட்டுதல் போன்ற சமிக்ஞைகளினூடாகவே சூதாட்டத் தரகர்களுக்கு ஸ்ரீசாந், சண்டிலா போன்ற வீரர்கள் சமிக்ஞைகளை தெரிவித்துள்ளனர். ராஜஸ்தான் ரோயல்ஸுக்கும், பஞ்சாப் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியொன்றில் ஸ்ரீசாந் வெள்ளைநிறக் கைக்குட்டை ஒன்றை போட்டுக்கொண்டு ஒரு ஓவரில் 13 ஓட்டங்கள் கொடுப்பேன் என மேட்ச் பிக்ஸிங் செய்ததாகவும் தரகர்களுக்கு சமிக்ஞை கொடுப்பதற்காகவே வெள்ளைநிறக் கைக்குட்டையை பாவித்ததாகவும் விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

இச் சூதாட்டத்தில் 100 கோடி ரூபாவுக்கு மேல் பந்தயம் கட்டப்பட்டுள்ளதாகவும் சூதாட்டத்தின் முக்கிய புள்ளி தலைமறைவாகியுள்ளதுடன் அவரின் மனைவி வடநாட்டுக்கு தப்பியோடி விட்டதாகவும் டில்லிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மே 15 ஆம் திகதி மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் சண்டிலாவிற்கு 60 இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இவர் இப்போட்டியில் விளையாடாதபோதும் அப்போட்டியில் விளையாடிய சவானுக்கும் சூதாட்டக் தரகர்களுக்குமிடையில் இடைத்தரகராக செயற்பட்டு மேட்ச் பிக்ஸிங் மற்றும் சமிக்ஞை தெரிவித்ததை ஒத்துக்கொண்டுள்ளதாக டில்லி சி.ஐ.டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆக, கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் சூதாட்டக்காரர்களின் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

**ஐ.பி.எல் சூதாட்டம் காரணமாக சிறுவன் கொலை**

இம்முறை ஐ.பி.எல் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட மும்பையைச் சேர்ந்த எம்.பி.ஏ மாணவனான ஹிமான் ஷூ ரங்கா 30 இலட்சம் ரூபாயை இழந்துள்ளான். தான் சூதாட்டத்தில் இழந்த தொகையை மீண்டும் பெறும் நோக்கில் தமது பணக்கார உறவினர் ஒருவரின் 13 வயது சிறுவனைக் கடத்தி 30 இலட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளான். அவர் பணம்தர மறுக்கவே கோபத்தில் அச் சிறுவனை கொலைசெய்துள்ளான். பொழுது போக்கிற்காக பார்க்கும் கிரிக்கெட் இன்று அவ் இளைஞனின் வாழ்க்கையையே புரட்டிப்போட்டுவிட்டது. இலட்சக் கணக்கில் செலவழித்து எம்.பி.ஏ பட்டம் படிக்க வைத்த அப்பெற்றோருக்கு அவ் இளைஞன் காட்டிய விசுவாசம் அனைவருக்கும் ஓர் படிப்பினை தான்.

**ரெய்னாவுடன் சுற்றும் ஸ்ருதி ஹாசன்**

இவ் ஐ.பி.எல். இல் இவ்வாறான சம்பவங்களுடன் சினிமா நட்சத்திரங்களும் கலந்து ஆர்ப்பரிப்பு செய்வதைக் காணக் கூடிய தாக இருக்கின்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ் வீரரான ரெய்னாவுடன் கமல்ஹாசனின் மகளும் நடிகையுமான ஸ்ருதிஹாசன் நெருக்கமாகப் பழகுவதாகவும் அவரை ஊக்கப்படுத்த நேரில் கலந்து கொள்வதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. சன்ரைஸ் ஐதராபாத்துடனான போட்டியில் ரெய்னா 39 ஓட்டங்கள் எடுத்தார். இப்போட்டியைக் காண ஸ்ருதிஹாசன் வந்திருந்ததைக் காணமுடிந்தது. போட்டி முடிந்ததும் இருவரும் நட்சத்திர ஹோட்டலில் ஒன்றாக விருந்து உண்டதாகவும் இந்திய ஊடகங்கள் மேலும் செய்தி வெளியிட்டிருந்ததை குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆக அனைவர் மத்தியிலும் பெரும் கௌரவத்தை பெற்று வந்த கிரிக்கெட் இன்று கோடிகளுக்கு மண்டியிட்டு கௌரவத்தை இழந்து வருகின்றதா? இதற்கு பிறகு நெஞ்சை நிமிர்த்தி கிரிக்கெட் கனவான்களின் விளையாட்டு எனக் கூறமுடியுமா? சந்தேகம் தான்.

எம்.தாசன்

Face book-60

# பாடசாலையில் கொண்டாடிய நண்பனின் பிறந்தநாள்!



சக்தி டிவியில் Good Morning Sri Lanka நிகழ்ச்சி மூலம் நேயர்களைக் கவர்ந்தவர் தினேஷ். இந்தவார பேஸ்புக் பகுதியில் தன்னைப்பற்றி பகிர்ந்து கொள்கிறார்.

ஹாய்.... நான் உங்கள் தினேஷ். இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் தலவாக்கெலை லிந்துலைதான் என் தாய் நகரம். படித்தது சரஸ்வதி தமிழ் மகாவித்தியாலயத்தில். தொழில் காரணமாக கொழும்பில் குடியேறி விட்டேன்.

அம்மா, அப்பா, தம்பி நான் என்னுடைய அன்பு மனைவி இவர்களோடு என் செல்லக்குழந்தை இப்படி அழகிய குட்டிக் குடும்பம்தான் என்னுடையது.

ஒவ்வொரு மனிதனுக்கும் எதாவது ஒரு ஆசை, இலட்சியம் கண்டிப்பாக இருக்கும் அப்படித்தான் எனக்கும் சிறுவயதில் இருந்தே அறிவிப்பாளராக வேண்டும் என்ற ஆசை இருந்தது.

கால ஓட்டத்தில் என்னுடைய ஊடக வாழ்க்கைக்கு முதல் வித்திட்டது வீரகேசரி பத்திரிகை. ஒப்புநோக்காளராக பணியாற்றிக்கொண்டிருக்கும் போதே நேத்ரா தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளருக்கான தேர்வு நடைபெற்றது. 2000 பேர் கலந்துக்கொண்ட தேர்வில் முதல் 16 பேர் அடங்கிய குழுவில் நானும் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். முதலில் 'வணக்கம் நேத்ரா' என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினேன். அதன்பின் தற்போது சக்தி டீ.வி.யில் பணிபுரிகிறேன்.

**வாழ்நாளில் சந்திக்க விரும்பும் நபர்?**

சூப்பஸ்டார் ரஜினிகாந்த். அவரின் எளிமைக்காக அவரை சந்திக்க விரும்புகிறேன். அவரின் மேல் உள்ள மரியாதையின் காரணமாக என்னுடைய மகளுக்கு யாத்ரா என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

அடுத்து இயக்குநர் பாலா. அண்மையில் அவரின் படைப்பில் வெளிவந்த பரதேசி படம். அரைமணிநேரம் கண்கொட்டாமல் யாரிடமும் எதையும் பேசவைக்காத படம். இறுதியில் கண்ணீரை மட்டுமே பதிலாக தந்த படம். இது என்னுடைய சமூகத்தின் வெளிப்பாடாகக்கூட இருக்கலாம்.

**பிடித்த சாப்பாடு** : அம்மா சமைக்கும் புட்டு, மனைவி சமைக்கும் கோழிக்கறி.

**சமைக்கத் தெரியுமா?** : ஆ... சுடுதண்ணீர் மட்டும்.

**பிடித்த நடிகர்** : ரஜினிகாந்த்

**நடிகை** : எந்த நடிகைக்கும் நான் ரசிகன் இல்லை.

**போட்டிகள் நிறைந்த இந்தத் துறையில் உங்களின் அடையாளம்?**

என்னுடைய பாணியில் நேயர்கள் எதை விரும்புகிறார்களோ அதை தெளிவாக தொகுத்து வழங்க வேண்டும் என நினைப்பவன்.

**உங்களுடைய + - ?**

+ = விடா முயற்சி,

- = முன்கோபம்

**உங்கள் பிள்ளை எந்தத் துறையில் வரவேண்டும் என்ற விரும்புகிறீர்கள்?**

கண்டிப்பாக வைத்தியராகத்தான் வரவேண்டும், அதற்கு மாற்றுக்கருத்தே இல்லை.

**பாடசாலை அனுபவம் பற்றி?**

நான் உயர்தரம் படிக்கும்போது என்னுடைய நண்பன் ரஜினிகாந்துக்கு பிறந்தநாள். இதை எப்படியாவது கொண்டாடவேண்டும் என்று நினைத்து நானும் என்னுடைய நண்பர்களும் சேர்ந்து கேக் வாங்கினோம். அதில் ஒரு குறும்புக்காரன் பட்டாசு மற்றும் ஈக்கி வெடி என்பனவும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். பாடசாலை இடைவேளை நேரத்தில் கொண்டாட்டம் நடந்தது. பின்னர் பட்டாசை கொழுத்தி வீசும்போது அது பக்கத்து வீட்டு பாட்டிமேல் பட்டு, பாட்டி பாடசாலைக்கே வந்து ஒரு வழிபண்ணிட்டாங்க. அதன் பின் வாங்கிய ஏச்சும் அடியும் இன்னும் மனதில் பதிந்திருக்கு.

**பொழுதுபோக்கு :-**

வழமையானவைதான் நிறைய படம் பார்ப்பேன். கருத்துள்ள பாடல் கேட்பேன்.

**உங்களை மனம் கவர்ந்த அறிவிப்பாளர் யார்?** நிச்சயமாக கஜமுகன். அவர்தான் என்னுடைய ரோல்மொடல், மற்றது லோஷன், சுஹைல், இஷாம்.

**கடவுள் உங்கள் முன் தோன்றினால் அவரிடம் என்ன வரம் கேட்பீர்கள்?**

இந்தப் பிறவியில் என்னை ஒரு மனிதனாக பிறக்க வைத்ததற்கு முதலில் நன்றி! அடுத்த பிறவியிலும் ஒரு மனித நேயமுள்ள மனிதனாக பிறக்கவேண்டும் என்று வரம் கேட்பேன்.

**இலட்சியம்:** என்னை ஒரு ரோல் மொடலாக மற்றவர்கள் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு வளரவேண்டும் என்பதே என்னுடைய இலட்சியம்.



சக்தியின் Good Morning Sri Lanka புகழ் தினேஷ்



# அப்பாதான் அம்மாவை நெருப்பு வைத்துக் கொளுத்தினார்

அன்பும் பாசமும் கட்டுண்டு ஒற்றுமையாக இருக்க வேண்டிய குடும்பங்கள் இன்று தனிப்பட்ட வன்மத்தாலும் கணவனின் மதுபோதையாலும் சிதைந்து சீரழிந்து போவதை நிதம் நிகழும் சம்பவங்கள் பறைசாற்றுகின்றன.

இச் சம்பவங்களை தம் வாழ்க்கைக்கு பாடமாக எடுத்துக்கொள்ள மறுப்பதால் மேலும் மேலும் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டு தான் செல்கின்றன. அவ்வாறாக கண்களைக் கலங்க வைக்கும் சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவாகியது.

இறக்குவானை ரதமுவாவன ஹொரமுல தோட்டத்தைச் சேர்ந்த ஜெயராம் புஷ்பராணிக்கு (32 வயது) மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையுமாக நான்கு குழந்தைகள். தோட்ட தொழிலாளியான புஷ்பராணியின் கணவன் கலவானை தனியார் தோட்டத்தில் வேலை செய்வதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 12 ஆம் திகதி புஷ்பராணிக்கு கடைசி இரவாக இருக்கும் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஏன் புஷ்பராணியே கூட இதை எதிர்பார்த்திருக்கமாட்டாள். அன்று நடந்த சம்பவத்தை புஷ்பராணியின் மூத்தமகன் பொலிஸாருக்கு கொடுத்த வாக்குமூலம் இதுதான் "கடந்த ஞாயிற்றுக்கிழமை அப்பா வழக்கம்போல் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தார். கொஞ்ச நேரத்தில் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சண்டை வந்தது. இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டாங்க. நேரம் போகப் போக சண்டை பெரிதாகிவிட்டது. வழமையாக சண்டை வரும். ஆனால் அன்று அப்பா மிகவும் ஆக்ரோஷமாக இருந்ததால் நானும் தம்பிகளும் பயந்து போய் அமைதியாக இருந்தோம். ஒரு கட்டத்திற்கு மேல் அப்பா கோவத்துல லாம்பெண்ணெய (மண்ணெண்ணெய்) எடுத்து அம்மா மேல ஊற்றி நெருப்பு வச்சாரு. நாங்கள் அதிர்ந்து போனோம். எங்களுக்கு என்ன செய்யிறதுன்னு தெரியலை. அம்மா ஆ... என்று அலறிக் கத்தினாங்க. எங்க கண்முன்னாலேயே எரிஞ்சாங்க. அதற்கிடையில் அப்பா எங்கள ஜன்னலால தூக்கி வெளிய வீசினாரு. எங்களால ஒன்னும் பண்ண முடியால" என்று புஷ்பராணியின் மூத்த மகன் பொலிஸாருக்கு வாக்குமூலம் தெரிவித்துள்ளான்.


சந்தேக நபரான புஷ்பராணியின் கணவனை பொலிஸார் கைது செய்தபோது அவரின் கால்கள் தீயால் வெந்து போயிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த தீக் காயத்திற்கு என்ன காரணமாக இருக்கும் "தம்மை காப்பாற்றும்படி கணவனின் கால்களைப் பிடித்து புஷ்பராணி மன்றாடியிருக்க வேண்டும்". அவ்வாறு கால்களை பிடித்தபோதே அவரின் கால்கள் தீயால் வெந்திருக்க வேண்டும் என விசாரணையை மேற்கொண்ட உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் கொலை செய்யப்பட்டுள்ள புஷ்பராணி வேறொருவருடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் எனும் சந்தேகத்திலேயே அப்பெண்ணின் கணவன் அவரை நெருப்பு மூட்டி கொலை செய்துள்ளதாக இறக்குவானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரியரத்ன குற்றத் தடுப்பு விசாரணை அதிகாரி கபில பிரசாத் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் தாயை இழந்து தனிமைபட்டுள்ள 12, 7, 6, 2 வயதுடைய இச்சிறார்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன்.

ஆக மனைவி மீதான வன்மமும், மது போதையும் ஒரு குடும்பத்தை சீரழித்துவிட்டது. தமது நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை நினைத்திருந்தால் இப்பாதகம் நடந்திருக்காது. தந்தையும் இல்லாமல், தாயையும் இழந்துவிட்டு இந்த பச்சிளம் பாலகர்கள் என்ன பாவம் செய்தார்கள் இவர்களின் எதிர்காலத்திற்கு யார் பதில் சொல்வர்?

**எம். தாசன் (நன்றி - மௌபிம)**

Colour: Cyan Magenta Black



# விறகு வெட்டச் சென்ற இடத்தில் நடந்த விபரீதம்

## மடுல்சீமை-மாதோவை காட்டில் நடந்த உண்மைச் சம்பவம்

சிறுவர்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு எத்தனையோ வகையான சட்டங்கள் உருவாக்கப்படாலும், விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டாலும் புதிய புதிய வழிகளில் காமக் கயவர்களின் வெறியாட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

இந்த காமக் கயவர்களின் இவ்வாறான நடவடிக்கைகளினால் பெற்றோர் விழிபிதுங்கி நிற்கின்றனர். தமது பிள்ளைகளை பாதுகாப்பது எப்படி என்ற கேள்வி அவர்கள் முன்னால் எழுந்திருக்கின்றது.

அதிலே யாரை நம்புவது? யாரை நம்பக்கூடாது என்று பிள்ளைகள் விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாமல் தடுமாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் பெருந்தோட்டங்களில் கலாசாரச் சீர்கேடுகளும் முறைகேடான நடவடிக் கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஒரு கட்டுக்கோப்பான கலாசாரப் பண்புகளை உடைய மலையக சமூகம் சினிமா, நவீன நாகரீக மோகம் என்பவற்றுக்குள் சிக்கிக் கொண்டு வழிதவறிப் போய்க் கொண்டிருக்கிறது.

இதில் முதல் நிலை வகிப்பது மாணவர்களாகவே இருக்கின்றனர்.

மலையகத்தில் நடக்கின்ற பாலியல் ரீதியான சம்பவங்களில் குறைந்தது மூன்று சம்பவங்களாவது மாணவர்களுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. பெரும்பாலானவற்றில் அவர்கள் பங்காளர்களாகவும் இருக்கின்றனர். இது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

சினிமாப்பட மோகமும், கையடக்கத் தொலைபேசிப் பாவனையும், இணையத்தளங்களின் பயன்பாடும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் தாக்கத்தை செலுத்துகின்றன.

இது மாணவர்களின் வழி தவறிய பயணத்திற்கு காரணமாய் அமைந்துவிடுகின்றது. ஆதலால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் மீதும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் யாருடன் பழகுகின்றனர், எங்கு போகின்றனர் என்பது பற்றியெல்லாம் தேடிப்பார்க்க வேண்டும். இது பெற்றோரின் கடமை. இல்லாவிடின் கீழ் குறிப்பிடப்படும் சம்பவங்களை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும்.

அண்மையில் மடுல்சீமை பிரதேசத்தை வியப்பில் ஆழ்த்தி முகம் சுளிக்கவைக்கும் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இது தற்போது இந்தப் பகுதியில் பேச்சுப் பொருளாகியுள்ளதுடன் இதனால் பெரும்பாலான பெற்றோர் அதிர்ச்சியில் உறைந்தும் போயுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவரிடம் இவ்விடயம் சம்பந்தமாக உதயசூரியனுக்காக வினவியபோது அவர் கூறியதாவது;

மடுல்சீமை-மாதோவை தோட்ட காட்டுப் பகுதிக்கு நானும் விறகு வெட்டுவதற்காக சென்றேன். அப்போது மானாப் புதருக்குள் இருந்து சத்தம் வருவதைக் கேட்டு நான் அப் பக்கமாக சென்றேன். அப்போது அந்த மானாப் புதருக்குள் சிறுவர்கள் இருவர் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மற்றய சிலர் அதை தமது கையடக்கத் தொலைபேசி ஊடாக வீடியோ படம் எடுத்து இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்களது நடவடிக்கையை நான் எனது கையடக்கத் தொலைபேசியில் தூரத்தில் இருந்தே வீடியோ எடுத்தேன். நான் இவர்களது நடவடிக்கையை தடைசெய்யவில்லை. காரணம் இம் மோசமான சம்பவத்துடன் யார் யார் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதை அறிவதற்காகவே அவ்வாறு செய்தேன்.

பின்னர் விரைவாக செயற்பட்டு அவர்கள் வீடியோ செய்த போனை நான் கைப்பற்றினேன். இச் சம்பவத்துடன் நான்கு பாடசாலை மாணவர்களும் 16-17 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்களும், ஒரு திருமணம் முடித்த நபருமாக மொத்தம் ஏழுபேர் காணப்பட்டனர். அத்தோடு ஒரு சிறுவனை ஆறுபேருமாக பலவந்தமாகவே துஷ்பிரயோகம் செய்து வீடியோ செய்திருக்கின்றனர்.

அதாவது இவ்விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது அச்சிறுவனை பயமுறுத்தி இந்தக் கயவர்கள் இவ்வாறு நடந்து கொண் டுள்ளனர். இது நீண்டகாலமாக தொடர்ந்து நடந்து வந்துள்ளது.

எது எப்படியோ அன்றைய தினம் என்னிடம் சிக்கிக் கொண்ட அவர்கள் சம்பந்தமாக நான் மடுல்சீமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயதிலக்கவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக உடனடியாக சம்பவத்தோடு தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

அதன்பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்களில் நால்வருக்கு பிணை வழங்கப்பட்டதுடன் இருவருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விசாரணைகள் மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் குறித்த நபர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்ற காட்டுப்பகுதியின் ஊடாக செல்லும் பாதை வழியாகவே மடுல்சீமை தமிழ் வித்தியாலயத்திற்கு பெரும்பாலான மாணவ மாணவிகள் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் அப்பகுதி பெற்றோர் அச்சத்துடனேயே காணப்படுகின்றனர்.

இவ்வாறு முகம் சுளிக்கும் அளவுக்கு அருவருப்பான முறையில் நடந்துகொள்ளும் இம் மாணவர்கள் மாற்றம் பெற்றது எவ்வாறு என்ற கேள்வியே எழுகின்றது.

எது எப்படியோ குறிப்பிட்ட சம்பவம் தொடர்ந்தும் நடைபெற்றிருந்தால் அது ஒரு சமூகப் பிரச்சினையாகவே மாறியிருக்கும். ஆகவே இவ்விட்யம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்த மாதோவை தோட்ட சிவில் பாதுகாப்பு கமிட்டியின் தலைவருக்கும் மடுல்சிமை பொலிஸாருக்கும் மக்கள் தமது பாராட்டுக்களை தெரிவிக்கின்றனர்.

எஸ்.சந்திரமோகன்



# கவிதைகள்



## அரும்புகளின் கனவு

துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தில்
எல்லையில்லா ஆசைகள்
எல்லாம் என் செல்வங்களின்
ரகசிய பாஷைகள்
என் காதுகளில் தேனருவியாய்
ஓதிவிட்டுச் சென்றது
கனவுகள் மெய்ப்படட்டும்
என் இதயத்துடிப்பை பார்க்க
இதயத்தில் வைக்கப்போகும் கருவி
என் உள்ளத்தில் தேனருவி
கள்ளம் கபடமற்ற
வெள்ளை உள்ளங்கள் -நீங்கள்
அணியப்போகும் அந்த
வெள்ளை மேலாடை
பறைசாற்றும்
துணிந்து சொல்வேன் -உங்களின்
மருத்துவத்தில் என் காயமற்ற
வருத்தம் கொள்வேன்
வரப் போகும் வருடங்கள்
வரங்களாய் உருளட்டும்
அரும்புகளின்
கனவுகள் மெய்ப்படட்டும்
மருத்துவம் மாபெரும் மகத்துவம்
அறுத்தெரியும் பிணிகளை
சமுதாயப் பணியது
அறுதியிட்டு கூறுகிறேன் நீங்கள்
அடையப்போவது உறுதி
உடைத்தெரியுங்கள் கோழைத்தனத்தை
விடைகிடைக்கும் ஏழைக்கும்
என் காதுகளில்
தேனருவியாய் ஓதிவிட்டுச்சென்ற
கனவுகள் மெய்ப்படட்டும்

எம்.மகேந்திரன்,ஹெராட்டன்.

## என் வாழ்வின் கையெழுத்து

கம்பனின் கையெழுத்து
கவிதையைத் தந்தது
என் குருவின் கையெழுத்து
கல்வியைத் தந்தது
என் நண்பனின் கையெழுத்து
உண்மையைத் தந்தது
என் பெற்றோரின் கையெழுத்து
பெருமையைத் தந்தது
ஆனால், அவளது அழகிய
கையெழுத்து தான் எனக்கு
வாழ்க்கையைத் தந்தது

ச.விஜயபாஸ்கர்,
சென்.ஜோன் டிலரி

## கண்ணாடி கதிரவன்

எண்ணிலடங்கா
மனிதர்களுக்கு



## பணம்

உலகத்தை ஆட்டிவைப்பது பணம்
உண்மையை பொய்யாக்குவதும் பணம்
உயிரை கொடுப்பதும் எடுப்பது பணம்
ஆசையை தூண்டுவதும் பணம்
ஆபத்தை உண்டு பண்ணுவதும் பணம்
உலோபியின் பணப்பெட்டியில்
உறங்குவதும் பணம்
பெற்றோரை கொலை செய்வதும் பணம்
உற்றாரை வெறுப்பதும் பணம்
ஊரை பகைப்பதும் பணம்
சீதனம் கேட்டு இல்லறவாழ்வை
சீரழிப்பதும் பணம்
சிந்தனையை கெடுப்பதும் பணம்
பல்லைக்காட்டி கடன் கேட்பதும் பணம்
சட்டத்தை மாற்றுவதும் பணம்
சதித் திட்டம் தீட்ட தூண்டுவதும் பணம்
கஷ்டத்தை தந்து காலனிடம்
அனுப்புவதும் பணம்
துயரத்தை தருவதும் பணம்
தூக்கு மேடைக்கு அனுப்புவதும் பணம்

நடராஜ் சிரியாணி,கொட்டகலை.

## பாகுபாடு

ஜாதி, மத, இன, மொழி
என பாகுபடுத்தி
வாழ்ந்துகொண்டிருக்கும்
மக்கள் என்றாவது
ஒன்றிணைவார்கள்
என்றெண்ணியே இறைவன்
ஒவ்வொருவருக்கும் ஓர்
இதயத்தைப் படைத்தான்.

நா.சரண்யா, பொகவந்தலாவை



## நினைக்கிறேன்!

அன்பே உன்னிடம்
மனதைத் திறக்க
நினைக்கிறேன்
காதல் கொண்டு
வாழ்நாள் முழுவதும்
உன் மடி தூங்க
நினைக்கிறேன்
உன்னால் கவலைகள்
மறக்க நினைக்கிறேன்
காலமெல்லாம் உன்



## அவளின் கருங்கூந்தல்

அவள் கருங்கூந்தல் கடும்
வாசனை கண்டே கடிமலரெல்லாம்
கடும் கோபம் கொண்டனவோ?
தன் கைதிகளாய்க் கிடந்த
கருவண்டுகளும் அந்த கருமலர்களின்
தேனை உண்டதனால் தான்
என்னவோ கரிய நிறம் கொண்டனவோ
என எண்ணி இடிந்தொடிந்து போன
இதழ் மலர்களின் இதயங்கள்
இறந்துவிடவே! இதழ்
தேனும் இளகி விழவே
காரணம் அறியா கருவண்டுகளும்
கண்ணீரில் முகம் புதைத்தனவோ?

பூ.மிருன்ராஜி, நானு ஓயா.

## காதலர்களே!

கடற்கரையோரம் நின்று
கற்பனைக் கோட்டையைக்
கட்டினால் பரவாயில்லை....
காலா காலமாய் உம்மைக்
கட்டிக்காத்த பெற்றோரை
கவலையில் ஆழ்த்தி
விடாதீர்கள்!

வி.விஜய்குமார், மாத்தளை



## கண்ணீர் ஓர் கனவு

நான் இதுவரை கவியெழுத
பேனா தொட்டதில்லை...
காரணம் - அவளின் நினைவுகள்
என்னை விட்டதில்லை
தீயால் பலமுறை
சுட்டால் கூட - காயம்
காய்ந்து போகும்
ஏனோ....?
அவளின் ஒற்றைக் கண்
பட்டதால் - இருதயம்
இன்னும் துடிக்கவில்லை
என் வாலிபக் கனவுகளெல்லாம்
ஒரு கல்லறைக்குள் - பூட்டி
என் கல்லறையின்
மேல் - கருணையுள்ள
பூவாய்ப் பூத்தவள்
அவள்.....
நண்பனே! வெள்ளம் வந்தால்
அணையை உடைக்கும்
எண்ணங்களின் நினைவுகள்
வந்தால் வாழ்வே
புதைகுழிக்குள்



## காத்திருப்பு

ஒட்சிசனாய் உன்னுள்
வந்த என்னை
காபனீரொட்சைட்டாய்
வெளியேற்றினாய்- நீ
மலர் மாலை சூடநினைத்த
என்னை
மலர் வளையம் சூட்டிவைத்தாய் நீ
ஆனால்! இன்றும்
உனக்காக
என் மயானமதில்
புதிய புதிதாக ஒவ்வொரு
நாளும் பூத்துக்கொண்டிருக்கின்றேன்
ஏன் தெரியுமா?
என்றாவது
ஒரு நாள் நான் உன்
மண நாளில் உனக்காக
மலர் மாலையாக ஆவதற்கு
இன்றும் என்றும் காத்திருக்கின்றேன்
நான் உனக்காக

சுந்தரராய்பாசுபாஷினி,
லிந்துல.



## தாயே!

வானுக்கு ஒரு சந்திரன் போல
இவனுக்கு ஒரு தீபம் நீயம்மா
கண்ணை இமை காப்பது போல
என்னை நீ காப்பாயே அம்மா
தொட்டிலில் நான் அழும் வேளைதனில்
கட்டிலிலிருந்து பதறி எழுவாயாமே
பள்ளிவிட்டு வருகையில்
துள்ளி வந்து தூக்குவாயே
பாலகனாக இருக்கும் போதினில்
பாலமுது ஊட்டினாயே
பிணி வந்து நானிருக்கையில்
பனிபோல் கரையுமே உன்மனசு
பல்லக்கில் உனை சுமக்க
நானிருக்கேன் பாடையில்
போக நீ நினைத்தாயா?
நன்றி செலுத்த நான் வருகையில்
நல்லடக்கம் செய்ய வைத்தாயே
அடுத்த ஜென்மம் எனக்கிருந்தால்
நீ என் மகளாக வரவேண்டுமம்மா!

திருமதி.ஜெனிதா பிரதீபன்,
நற்பிட்டிமுனை-02

## உனக்கான விண்ணப்பம்

நான் வாசித்து நேசித்த
பக்கங்களை
மூடி வைக்கிறேன்
என்னை நேசிக்கும்
உனக்காக

பெ.பவானி, இரத்தினபுரி

# நினைத்ததை முடிப்பவன்! 49

பாலா சங்குப்பிள்ளை

இரவு மணி பத்து. அந்த பாழடைந்த பங்களா மிகப்பெரிய தோட்டத்தைவிட்டு வெகுதூரத்தில் இருந்தது. முன்னர் அது பெரிய துரையின் பங்களாவாக இருந்தது. ஏதோவொரு பிரச்சினையில் பெரிய துரையின் மனைவி மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தீவைத்துக் கொண்டாள். அதற்குப் பின் அவளின் ஆவி நடமாடுவதாகக் கதை பரவியதனால் யாருமே அந்தப் பக்கம் போவதில்லை. வெகுநாட்களாக பாவனையில்லாமல் ஆள் நடமாட்டமில்லாமல் பாழடைந்த அந்த பங்களாவை இடையிடையே சமூக விரோதிகள் பயன்படுத்துவதுண்டு. அப்படியான பங்களாவினுள்ளே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட விளக்கு வெளிச்சத்தில் வல்லவனும் வில்லவனும் நின்றிருந்தார்கள். அவர்களுக்கு சற்று தூரத்தில் வேலவன் வெறிபிடித்த வேங்கையைப் போல பாய்வதற்குத் தயாராக இருந்தான். அவர்களுக்கு சற்று தள்ளி நாற்காலியில் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் அதிர்ச்சியுடன் உட்கார்ந்திருந்தது வேறு யாருமல்ல முத்துராமன்தான். அவர் கண்களில் பயமும் பதற்றமும் இருந்தது. வல்லவனும் வில்லவனும் எதுவும் புரியாமல் அங்கே நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். முத்துராமன் மெதுவாக வேலவனைப் பார்த்தார்.

"டேய்.... நான் உன் அப்பன்டா... என்னை எதுக்காக இப்படி கட்டிப் போட்டிருக்கே...."


"மனுஷனாயிருந்தா தட்டிக்குடுத்து பேசலாம். நீ மிருகம்தானே. உன்னோட அரசியல் லாபத்துக்காக எத்தனை பேரோட வாழ்க்கையை நாசமாக்கினே. நல்ல பாம்புக்கூட தன்னைத் தாக்க வர்றவனைத்தான் கொத்தும். ஆனா நீயோ உன்னோட பக்கத்துல உள்ளவனைக்கூட் அவன் உனக்கு உபயோகமில்லைன்னு தெரிஞ்சா உடனே அழிச்சிடுவ...."

வில்லவன் சட்டென முன்னால் வந்தான்.

"வேலவன்.... அமைதியாயிருந்த நீங்களே அசுரப் புயலா மாறினது சரிதான். ஆனா உங்க அப்பாவைப் போய்"

"யாரு அப்பன்... இவன் எனக்கு அப்பனா... அயோக்கியன், நயவஞ்சகன். நண்பன்னுகூட பார்க்காம நல்ல மனுஷனை நரகத்துல தள்ளின பாவி. இவன் என்னோட அப்பன் இல்லை. நான் தியாகி வெள்ளைச்சாமியோட மகன். இந்த இரகசியம் இவருக்கே தெரியாது! என்னோட அப்பா வெள்ளைச்சாமியும் இவனும் உயிர் நண்பர்கள். அப்போ இவன் அரசியல்ல வளர்ந்துவரும் நிலை. என்னோட அப்பா எஸ்டேட்ல டிரைவரா இருந்தாரு. எல்லோருக்கும் நிறைய உதவி செய்வாரு. அன்பாப் பழகுவாரு. அதுனால இவருக்கு எல்லா இடத்துலயும் மக்கள் செல்வாக்கு இருந்திச்சி. ஏற்கனவே ஒரு எஸ்டேட் சொந்தக்காரனாயிருந்த இவனுக்கு எப்புடியோ அரசியல், பட்டம், பதவின்னு ஆசை வந்திடுச்சி. அதுக்கு சரியான வழி மக்கள் செல்வாக்குள்ள வெள்ளைச் சாமியோட நட்பு. வெள்ளை மனசுக்காரரான வெள்ளைச்சாமி பசுத்தோல் போர்த்திய புலியை நம்பினார். இவனுக்காக மேடையேறினார். மடிப்பிச்சை கேட்டார். மண்ணைத் தொட்டுக் கும்பிட்டார். அவரோட உழைப்பு இவனுக்கு தேர்தல்ல வெற்றியைத் தந்தது. முதன் முதலா பாராளுமன்ற உறுப்பினரானான். ஆனா.... அதுக்கப்புறம்தான் இவன் தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினான்.

முன்னால் ஐந்து பின்னால் ஆறு வாகனங்கள் புடைசூழ



ஆரவாரத்தோட பயணம் செஞ்சான். ஆனால், மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. எங்கே பார்த்தாலும் விளம்பரத்துக்குப் பஞ்சமில்லை. ஆனால், மக்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை. மேடையில் பேசுறது எல்லாமே பொய்; அராஜகம், அநியாயம், அடாவடித்தனம்னு இவன் ஆட்டம் போட்டதை வெள்ளைச்சாமி விரும்பலை. வெள்ளைச் சாமியோட மனைவி அதாவது என்னோட அம்மாவும் இவனோட மனைவியும் பிரசவத்துக்காக ஒரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வெள்ளைச்சாமி இருந்தா தனக்கு இடைஞ்சலாயிடும்னு நெனைச்சி தன்னோட ஆளுகளை வச்சி ரொம்ப மோசமா அடிச்சி மலையிலயிருந்து உருட்டிவிட்டுட்டான். அந்த நேரத்துல நான் பிறந்தேன். அவனுக்கு பெண் பிள்ளை பிறந்தது. ஏற்கனவே இவனைப் பத்தி நல்லா தெரிஞ்சிருந்த எங்கம்மா என்னோட உயிருக்கு ஆபத்து ஏற்படலாமுன்னுற பயத்துல என்னை இவன் சம்சாரத்தோட தொட்டில்ல போட்டுட்டு அந்த பெண் குழந்தையை தானே வளர்க்க முடிவு செஞ்சாங்க என்னோட உடம்புல ஓடுற இரத்தம் நல்லவரான எங்கப்பாவோட இரத்தம். அதுனால நான் நல்லவனா வளர்ந்தேன். எங்கப்பா தலையில அடிபட்டதால பைத்தியமாகி ஊர் ஊரா திரிஞ்சி கடைசியில அனாதையா செத்துட்டாரு. எங்கம்மாவும் செத்துட்டாங்க. சாவுறதுக்கு முன்னால என்னைத் தேடிவந்து எல்லா உண்மையையும் சொன்னாங்க. அப்புடின்னா இவனோட மகள் யார் தெரியுமா, தன்னோட கௌரவம் வீணாயிடும்னுறதுக்காக நான் உயிருக்குயிரா காதலிச்சேனே மஞ்சுளா.... இவன் ஆள் வச்சி கொலை பண்ணினானே அதே மஞ்சுளாதான் இவன் மகள். தன்னோட சுயநலத்துக்காக மகள்ன்னு தெரியாமலே கொன்னுட்டான். மக்கள் மத்தியில செல்வாக்கு சரியத் தொடங்கியதும் லயத்துல பேப்பர் பொறுக்கிக்கிட்டிருந்த கண்ணுசாமியை முதல்ல தன்னோட பீ.ஏ ஆக்கினான். அப்புறம் பிரதேசசபை, மாகாணசபைன்னு இவனை நிற்க வச்சி ஜெயிக்க வச்சான். கடைசியா பாராளுமன்ற உறுப்பினராக்கி அவன் பெயர்ல இவன் எல்லா தில்லுமுல்லு, சட்டவிரோத செயல்களும் செஞ்சி, இவனை மக்கள் மத்தியில நல்லவனா காட்டிக்கிட்டான். பழி ஓரிடம் பாவம் ஓரிடம்னு கண்ணுசாமிக்கும் தெரியும். ஆனா, அவனுக்கு தேவை பட்டம், பதவி, பெண்கள், சொகுசு வாழ்க்கை. அதுனால அவன் எதையும் கண்டுக்கலை. தேர்தல் நெருங்கின நேரத்துல கண்ணுசாமி ஊழல் செஞ்சான். சட்டவிரோத காரியங்கள்ல ஈடுபட்டான்னு சொல்லி அவனைக் கட்சியை விட்டுத் தூக்கினான். மக்கள் செல்வாக்குள்ள வில்லவனை தன்னோட வலைக்குள் போட்டான். ஆனா.... அவனை கண்காணிக்க கண்ணுக்குத் தெரியாத நினைத்ததை முடிப்பவன் தான் நியமிச்சான்னுற விஷயம் பாவம் இவனுக்குத் தெரியவே தெரியாது...."

(தொடரும்....)

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

23.05.13 முதல் 29.05.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | நன்மை | போட்டி | இலாபம் | பகை | போட்டி | பொறுமை | ஊக்கம் |
| ரிஷபம் | திறமை | நன்மை | தோல்வி | வெற்றி | கவனம் | தனம் | திடம் |
| மிதுனம் | சோர்வு | உதவி | வெற்றி | நன்மை | மகிழ்ச்சி | சினம் | பகை |
| கடகம் | கவனம் | நலம் | உதவி | போட்டி | நட்பு | உற்சாகம் | ஜெயம் |
| சிம்மம் | சாந்தம் | ஆரோக்கியம் | மேன்மை | மேன்மை | சோர்வு | பாராட்டு | வரவு |
| கன்னி | அமைதி | ஊக்கம் | அமைதி | பாராட்டு | விருத்தி | நன்மை | மறதி |
| துலாம் | சுகம் | பிரீதி | தெளிவு | நோய் | களிப்பு | இரக்கம் | விவேகம் |
| விருச்சிகம் | நலம் | சுபம் | பொறுமை | உயர்வு | தொல்லை | ஊக்கம் | வீம்பு |
| தனுசு | புகழ் | முயற்சி | தேர்ச்சி | களிப்பு | முயற்சி | மகிழ்ச்சி | சுபம் |
| மகரம் | பயம் | கோபம் | சிந்தனை | பாசம் | பயம் | உழைப்பு | ஆதரவு |
| கும்பம் | பக்தி | சுகம் | நட்பு | அன்பு | பரிசு | உற்சாகம் | சினம் |
| மீனம் | பொறுமை | தனம் | நற்செயல் | அமைதி | விவேகம் | அமைதி | பாசம் |

# உயிர்காக்கும் வைத்தியர்கள் கடமை தவறினால்...!

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் வட்டகொடை வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பல்வேறுபட்ட இன்னல்களை சந்தித்துவருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் வைத்தியசாலை முறையாக இயங்கி வந்தபோதிலும் அண்மைக்காலமாக பல குறைபாடுகள் இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்களை ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்வதற்கு இயந்திரம் இருந்த போதிலும் தற்போது அது செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக இப்பரிசோதனையை மேற்கொள்வதற்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதோடு, அங்கு செல்ல முடியாதவர்கள் தலவாக்கலையில் உள்ள தனியார் மருத்துவமனையையே நாட வேண்டியுள்ளது.

இதன் காரணமாக அதிக பணம் செலவு செய்யவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தேவையான வசதி இல்லாதிருப்பதோடு, குடிப்பதற்குக் கூட தண்ணீர் வசதி இன்றியே காணப்படுகிறது.

அண்மைக்காலமாக இப்பிரதேசத்தில் இருந்து நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்லும் போது வைத்தியர்கள் உரிய சிகிச்சைகளை வழங்குவது இல்லையென பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலை காணப்படுவதால் பலர் உயிரிழக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் நுவரெலியாவில் நடைபெற்ற வசந்தகால நிகழ்வினைப் பார்க்க கொழும்பிலிருந்து வந்தவர்கள் பயணித்த வேன் ஒன்று விபத்துக்குள்ளாகியது. இரவு நேரத்தில் நிகழ்ந்த இவ்விபத்தில் காயமடைந்தவர்களை பொதுமக்கள் வட்டகொடை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

உயிருக்காக போராடிக் கொண்டிருந்த இருவர் வைத்தியசாலையிலேயே உயிரிழந்தனர். வைத்தியர்களும், ஊழியர்களும் உரிய நேரத்தில் கடமையைச் செய்யாத காரணத்தினால் தான் இந்த இரு உயிரிழப்புகளும் ஏற்பட்டதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர். இதனால், சம்பவ தினத்தன்று பொதுமக்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

### வட்டகொடை வைத்தியசாலை குறித்து பொதுமக்கள் அதிருப்தி

இவ்விடயம் தொடர்பாக லிந்துலை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க கடந்தவாரம் பெய்த கடும் மழையின்போது லிந்துலை வலகா கொலனியில் வீடு ஒன்று இடிந்து விழுந்ததில் நான்கு வயது சிறுமி காயமடைந்தார். இச்சிறுமி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

எனினும் சிகிச்சை பலனின்றி சிறுமி இறப்பைத் தழுவினாள். வைத்தியர்கள் உரிய நேரத்தில் விரைந்து சிகிச்சை அளிக்காமல் இழுத்தடிப்புச் செய்ததாகவும் இதன் காரணமாகவே சிறுமி உயிரிழந்ததாகவும் சிறுமியின் பெற்றோர் பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அத்தினத்தில் குழந்தையை பார்க்கச் சென்ற பலர் வைத்தியசாலைக்கு முன்பாக கோஷங்களை எழுப்பி கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

உயிரைக் காப்பாற்ற வேண்டிய வைத்தியசாலை நிர்வாகம் அசமந்தப் போக்கில் செயற்படுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

பொதுமக்களின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வைத்திசாலையில் உள்ள வைத்தியர்கள், நிர்வாகிகள் சிறந்த முறையில் அவர்களின் கடமைகளை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கே.புஷ்பராஜ்

## மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி

பசறை, கோணக்கலை லோவர் டிவிசன் (கீழ்ப்பிரிவு) ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கரப்பந்தாட்டப் போட்டியொன்று 24, 25 ஆம் திகதிகளில் கோணக்கலை லோவர் டிவிசன் பொது மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொள்ளும் அணிகளுக்கு பெருந்தொகைப் பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் 0724972411, 0779475671, 0724735213 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை மேற்கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஹாலிஎல நிருபர்

## கம்யூட்டர் நிறுவனத்தில் வேலை



ஒரு கம்பியூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான்.

தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இன்டர்வியூ. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள்.

ஈ மெயிலா? எனக்கு ஈ மெயில் இன்டர்நெட்டெல்லாம் தெரியாதே என்றான் துடைக்க வந்தவன். கம்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே! என்று அவனை அனுப்பிவிட்டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்ல. கையில் 10 டொலர்கள் இருந்தன. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 டொலர் லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம் மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பு சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவனுடைய ஈமெயில் முகவரி கேட்டார். வியாபாரி, ஈமெயில் முகவரி இல்லை என்று பதிலளிக்க, ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறிவிட்டீர்களா? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இன்டர்நெட்டெல்லாம் தெரிந்திருந்தால்? என்று ஆச்சரியமாய்க் கேட்டார் வங்கி ஊழியர்.

அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன் என்றார் வியாபாரி.

அமெரிக்காவில் Power Cut ஆனால்..?
அவங்க ElectricityBoard க்கு போன் பண்ணுவாங்க !
ஜப்பானில் Power Cut ஆனா, அவங்க Fuse போயிருக்கா அப்படின்னு செக் பண்ணுவாங்க !
-ஆனால்
இலங்கையில் Power Cut ஆனா, என்ன பண்ணுவாங்கன்னு தெரியுமா?
முதல்ல பக்கத்து வீட்டை செக் பண்ணுவாங்க !

## இது தாண்டா உலகநியதி

நாற்காலி உடைஞ்சால் உட்கார முடியாது, கட்டில் உடைஞ்சா படுக்கமுடியாது. ஆனா முட்டை உடைஞ்சா தான் ஒம்லெட் போட முடியும்.

காக்கா என்னதான் கறுப்பா இருந்தாலும் அது போடுற முட்டை வெள்ளைதான். முட்டை என்னதான் வெள்ளையா இருந்தாலும் அதுக்குள்ள இருக்கிற காக்கா கறுப்புதான்.

பஸ் உன்மேல ஏறினாலும் பஸ்ஸு்ல நீ ஏறினாலும் டிக்கெட் வாங்கப் போறது நீதான்.

★★★

பஸ் எங்கே போனாலும் பஸ் ஸ்டேண்ட் அங்க தான் இருக்கும். ஆனால் சைக்கிள் எங்க போனாலும் சைக்கிள் ஸ்டேண்ட் கூடவே போகும்.

## கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



ராஜா : நேத்து உன்னைத் தேடி உன் வீட்டுக்கு வந்தேன். உன்னை எங்கேன்னு உங்க அப்பாகிட்ட கேட்டதுக்கு அந்த மாடு எங்க மேயுதோ?ன்னு சொன்னாருடா. உனக்கு உன் வீட்டில மரியாதை அவ்வளவுதானா???

சோமு : ஓகோ உன்னைத் தேடி ஒரு கழுதை வந்திச்சின்னு சொன்னாரு அது நீ தானா???

### சிந்திக்க...

கருவறையில்
தங்க இடம்
கொடுத்த
தாய்க்கு தன்
வசிப்பறையில்
தங்க இடம்
தராத மூடர்களினால்
உருவானது
முதியோர்
இல்லம்

### சிரிகக...

புலிக்கு பின்னால
போன
மானும்
பொண்ணுக்கு
பின்னால போன
ஆணும்
பிழைத்ததாக
சரித்திரம்
இல்லை.

தலைவரே தொண்டர்கள் கூட்டமா இருக்கிறப்ப ஆட்டோகிராஃப் போடாதீங்கன்னு சொன்னேன் கேட்டீங்களா ?

ஏன் இப்ப என்னாச்சு ?

கூட்டத்தோடு கூட்டமா எவனோ ஒருத்தன் உங்க செக்புக்குல கையெழுத்து வாங்கிட்டான்.

காதல் - அது
சீனா போன் போல
எல்லோரிடமும்
உள்ளது - ஆனால்
உண்மைக்காதல்
ஆப்பிள் போன் போல
ஒரு சிலரிடம் மட்டும்
உள்ளது .........



'நீங்க இரண்டு வார்த்தை சொல்லணும். ஆனா அதுல குறைஞ்சது 200 லெட்டர்ஸ் ஆவது இருக்கணும்'

'தெரியலியா?'

'போஸ்ட் பொக்ஸ்' அதுலதான் நிறைய லெட்டர்ஸ் இருக்குமே!

## சூப்பர் பயில்வான்

படிப்பறிவு இல்லாத பயில்வான் ஒரு பஸ்ஸில் ஏறினார். அப்ப அவருக்கு சீட் கிடைக்கவில்லை. அதனால டிரைவருக்கு எதிரில் இருந்த சீட்டில் உட்கார்ந்து டிரைவரையே பாத்துக்கிட்டு வந்தார். ஒரு இடத்தில டிரைவர் இறங்கி டீ குடிக்க போயிட்டார். திரும்பி வந்து பார்த்தா பயில்வான் கியரைக் கழற்றி கையில வச்சிக்கிட்டு இருந்தார்.

டிரைவர்: ஏம்பா இப்படி பிடிங்கி வச்சிருக்க.

பயில்வான்: நானும் ரொம்ப நேரமா பாக்கிறேன் நீயும் ஆட்டி ஆட்டி பிடிங்கி பாக்கிற உன்னால முடியலை. இதோபாரு நான் புடுங்கிட்டேன் என்றார்.





ஒரு குடிகாரன் ஞானி ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான்.

''நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள் ஐயா...'' என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு ஞானி, ''நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்''.

மறுநாள் மாலை குடிகாரன் ஞானியைத் தேடி வந்தான். அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார். தூணைப் பார்த்து, ''ஐயோ என்னை விட்டுவிடு... விட்டுவிடு...'' என்று கத்திக் கொண்டிருந்தார்.

உடனே குடிகாரன், ''நீங்கள்தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டுவிடுங்கள்'' என்றான்.

உடனே ஞானி சிரித்துக் கொண்டே, ''நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீ தான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே விட்டுவிடு'' என்றார்.

காலத்தின் கரங்களில் நீ சிக்கினால்
வெற்றியின் தூரம் வெகுதூரம்.
காலம் உனது கரங்களுக்குள் சிக்கினால்
தோல்வியின் தூரம் தொலைதூரம்.
மனதில் நம்பிக்கை உறுதிகொண்டால்
மரணம்கூட மண்டியிட்டு நிற்கும்

★★★

வலிகளை சுமக்கும் இதயத்திற்கு
கண்ணீர் சிந்த தெரியாது
கண்ணீர் சிந்தும் விழிகளுக்கோ
வலிகளைத் தாங்க முடியாது...

★★★

யோசிக்காமல் நீ செய்யும்
ஒவ்வொரு செயலும்
உன்னை யோசிக்க வைக்கும்
யோசித்து நீ செய்யும் ஒவ்வொரு
செயலும் பிறரை யோசிக்க வைக்கும்...

# இரவு பயணத்தில் மிரட்டிய ஆவி



கேகாலை மாவட்டத்திற்குட்பட்ட தனியார் தேயிலைத் தோட்டம் அது. நான் கள உத்தியோகத்தராக நியமனம் பெற்றுச் சென்று இரண்டு வாரமாகியிருந்தது. தோட்டத்தில் தோட்ட வைத்தியசாலையையொட்டிய சிறு குடியிருப்பைத் தோட்ட நிர்வாகம் எனக்கு வழங்கியிருந்தது.

புதிய உத்தியோகம் என்பதால் நிறைய வேலையைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனவே காலை முதல் மாலை வரை தோட்டத்தில் இடுப்பொடிய வேலை செய்துவிட்டு இரவு 7 மணிக்கே குடியிருப்புக்குத் திரும்ப முடியும். அதன் பிறகுதான் சமைப்பது, துவைப்பது என எனது வேலைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

ஒருவாறு போயா, ஞாயிறு என இரண்டு விடுமுறைகள் ஒருசேர வந்தது. துரையிடம் அனுமதி பெற்று நுவரெலியா பிரதேசத்திலிருக்கும் எனது வீட்டுக்குச் சென்றேன். இரண்டு நாள் விடுமுறை இன்பமாகக் கழிந்தது. அம்மா கட்டிக் கொடுத்த உணவுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களைச் சுமந்து கொண்டு மீண்டும் கேகாலை நோக்கிப் பயணமானேன். என்னடா தான் சந்தித்த ஆவிக் கதையைச் சொல்வான் என்றால் இவன் தன் சொந்தக் கதையைச் சொல்லிவெறுப்பேற்றுகிறானே என எண்ணுகிறீர்களா?

நான் கேகாலையை அடைந்த போதுதான் என் வாழ்வில் நான் மறக்க முடியாத அந்தச் சம்பவம் நடந்தது.

பிரதான வீதியில் பஸ்ஸிலிருந்து இறங்கிச் சுமார் 3 கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டும். நான் பஸ்ஸை விட்டு இறங்கியபோது மணி இரவு ஒன்பது.

அந்தப் பாதைக்கோ தோட்டத் திற்கோ மின்சார வசதி கிடையாது. அத்தோட்டத்தில் இரவு 7 மணிக்குப் பின்னர் அதிகமாக சன நடமாட்டத்தைக் காண முடியாது. பயணப் பைகளை சுமந்து கொண்டு என் நடைப்பயணத்தை ஆரம்பித்தேன். நல்ல நிலவு வெளிச்சம் இருந்தது. நடையை எட்டிவைத்தேன். பிரதான பாதையிலிருந்து சிறிது தூரம் சென்ற நான் ஒரு வளைவின் பின்னால் திரும்பிப் பார்த்து அதிர்ந்து போனேன்.

சற்று தூரத்தில் யாரோ நடந்து வந்து கொண்டிருந்தார். இந்த நேரத்தில் யாராக இருக்கும்? அத்தோட்டத்தைச் சேர்ந்த தெரிந்தவர்கள் யாராவதாக இருந்தால் கதைத்துக் கொண்டே போய்ச் சேரலாம். அல்லது ஏதாவது மர்ம உருவமாக இருந்தால்....! அந்தக் குளிரிலும் எனக்கு வியர்த்தது. என்றாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு சற்று நிதானித்துப் பார்த்தேன். அருகில் வந்ததும் தான் தெரிந்தது. அது ஒரு பெண். அருகில் வந்தவள் என்னை விநோதமாகப் பார்த்து விட்டு என்னைத் தாண்டி நடந்தாள். அப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருந்தது. யாரோ இத்தோட்டத்தைச் சேர்ந்த பெண்தான் என நினைத்துக் கொண்டே அவளைத் தொடர்ந்தேன். அவள் என்னைத் திரும்பித்திரும்பி பார்த்த படி சென்றாள். என்னைப்பார்த்து ஏதோ பேய் பிசாசு என்றோ அல்லது

தோட்டத்தைச் சேர்ந்தவன்தான் என அவளிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன். எனினும் அவள் என்னிடம் முகம் கொடுத்துப் பேச வில்லை.

அவளுக்கு சுமார் 40 வயதிருக்கலாம். குளிருக்கு பயந்து சேலையை முக்காடாக போட்டிருந்ததால் அவள் முகம் சரியாகத் தெரியவில்லை. கைகால்கள் கறுத்துப்போய் அவள் ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி என்பதைக் காட்டியது.

சரி இந்த நேரத்தில் எங்கே போய் வாறீங்க... என்றேன். பதிலில்லை. சிறிது நேரத்திற்குப்பின் அவளிடமிருந்து ஒரு விசும்பல் சத்தம் மட்டும் கேட்டது. எனக்கோ தூக்கி வாரிப்போட்டது. என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருக்கும் போது சிறிதுதூரத்தில் டோர்ச் லைட் வெளிச்சம் தெரிந்தது.

ஆமாம் அந்தத் தோட்ட தொழிற்சாலையில் காவல் கடமை புரியும் சின்னக்கண்ணு எதிரில் வந்த கொண்டிருந்தார். அருகில் வந்து முகத்தில் லைட் வெளிச்சத்தை அடித்துப்பார்த்து என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

''சேர் இப்பத்தான் ஊருக்குப்போய் வாறீங்களா'' என்று விசாரித்து விட்டு என்னைக் கடந்து சென்றார். அப்போதுதான் கவனித்தேன். என்னுடன் வந்த பெண்ணிடம் அவர் எதுவும் கதைக்கவில்லை. அவளும் விசும்பியபடியே சென்று கொண்டிருந்தாள்.

'' அக்கா அழாதீங்க. இந்த இரவு நேரத்தில நீங்க வர்றதிலயிருந்தே ஏதோ பிரச்சினைன்னு புரியுது'' என்றேன் அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக.

நான் எதிர்பார்த்ததற்கு அதிகமாக அவளது அழுகை கூடியது. தேம்பித் தேம்பி அழுதாள். அழுதபடி அவள் சட்டென்று நின்று என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவளைப்பார்த்த என் கண்கள் குத்திட்டு நின்றன.

என்னை வெறித்துப்பார்த்த அவள் அடு த்தகணம் செய்த விடயம்...! ஓவென்று கதறியபடி பாதைக்கு அருகிலிருந்த பள்ளத்தை நோக்கி

என் இந்தப் பள்ளத்தை நோக்கி ஓடுகிறாள். எதுவும் புரியவில்லை. சிறிது நேரத்திற்கு பின் எனக்கு சுய நினைவு வந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பள்ளத்தை எட்டிப்பார்த்தேன்.

அது ஒரு கைவிடப்பட்ட காணி. ஆளுயரத்திற்கு தேயிலையும் ஏனைய செடிகளும் வளர்ந்திருந்தன. இதற்குள் போய் ஏன் மறைந்தாள். நான் எனது பைகளை வீசிவிட்டு ஓட்டம் பிடித்தேன். என்னுடைய குடியிருப்புக்குச் சென்று கதவைத் திறந்ததுதான் தெரியும். மறுநாள் காலை 10 மணியளவில்தான் கண்விழித்தேன். யாரோ கதவைத் தட்டினார்கள். எனது பைகள் வீதியில் கிடப்பதைப் பார்த்து பயந்து போய் யாரோ கதவைத்தட்டினார்கள். அதற்குள் தோட்டத்துப் பெரியவர்கள் என் வீட்டில் கூடி விட்டார்கள். நான் நடந்ததைச் சொன்னேன். அந்தத் தோட் டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கணவனுடன் ஏற்பட்ட தகராறில் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டாளாம். அவள்தான் அப்படி ஆவியாக அடிக்கடி பலரின் கண்களுக்குத் தட்டுப்படுவதாகக்கூறினார்கள்.

மேலும் அன்றைய தினம் இரவு என்னைச் சந்தித்த காவல் காரர் சின்னக்கண்ணு வழியில் என்னை மட்டுமே கண்டதாகவும் என்னுடன் எந்தப் பெண்ணையும் தான் காணவில்லை என்றும் சொன்னார்.

அப்படியானால் அன்று நான் பார்த்தது ஒரு ஆவியையா? இரண்டுவாரம் காய்ச்சலில் படுத்தபடுக்கையாகக் கிடந்த நான் ஒருவாறு

# சும்மா






























# கலாட்டா





# ஆல்பம்

எப்படி இருந்தவங்க
இப்படி ஆயிட்டாங்களே என்று நாம்
அடிக்கடி சொல்வதுண்டு.
ஆம்! காலம் எப்படிப் போகிறது என்
பதைப் பார்த்தால் வியப்பாகத்தான்
இருக்கிறது.
நடிகை பாவனாவின் ஆல்பம்
இங்கே உங்களுக்காக!